
Bhagavan sri shiradi Baba

# ஷிர்டி சாயிபாபா



## ஒன்பது வியாழக்கிழமை விரதமும்

### பூஜா முறைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெய் ஸ்ரீ ஸாயி ராம்

# ஸ்ரீ ஸாயிபாபாவின் ஒன்பது வியாழக்கிழமை விரத, பூஜா முறைகள்.



- நம்பிக்கையோடு கேளுங்கள்.
- பொறுமையுடன் காத்திருங்கள்.
- கேட்டவை எல்லாம் கிடைத்து விடும்.
- கிடைத்தவை அனைத்தும் நிலைத்துவிடும்.

ஸ்ரீ ஸாயியைப் பணிக எல்லோருக்கும். சாந்தி நிலவட்டும்.

புத்தகம் பெற்றுக்கொள்ளுமிடம்.


சீரடி ஸாயி மந்திர்
314, நாவலர் வீதி நல்லூர்,
யாழ்ப்பாணம்.
இலங்கை
தொடர்பு : 077-7222568

*Shiradi Sai mantheer*
*314, Navalar Road,*
*Nallur, Jaffna.*
*Sri Lanka.*
*Contact: 077-7222568*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | பக்க எண் |
|---|---|
| 1. ஷீர்டி சாயிபாபா வாழ்க்கைவரலாற்றின் சுருக்கம் ..... | 3 |
| 2. ஸ்ரீ சாயிமகான் உறுதி மொழிகள் ..... | 5 |
| 3. ஸ்ரீ சாயிமகான் விரத விதிமுறைகள் ..... | 6 |
| 4. விரத நிறைவு (உத்யாபனம்) விதிமுறைகள் ..... | 7 |
| 5. ஸ்ரீ சாயி விரத கதை ..... | 8 |
| 6. ஸ்ரீ ஷீர்டி சாயிபாபாவின் மூல மந்திரம் ..... | 11 |
| 7. ஸ்ரீ சாயிநாதர் திருவடி ..... | 11 |
| 8. ஸ்ரீ ஷீர்டி சாயிபாபாவின் காயத்ரி ..... | 11 |
| 9. ஸ்ரீ ஷீர்டி சாயிபாபாவின் த்யான ஸ்லோகம் ..... | 11 |
| 10. ஸ்ரீ சாயி ஸ்மரணை ..... | 12 |
| 11. ஸ்ரீ சாயிபாபா பாமாலை ..... | 14 |
| 12. ஸ்ரீ சாயி பாவனி ..... | 17 |
| 13. ஸ்ரீ தத்தாத்ரேய பாவனி ..... | 20 |
| 14. ஸ்ரீ சாயிபாபா புஷ்பாஞ்சலி ..... | 23 |
| 15. ஸ்ரீ சாயிபாபா அஷ்டோத்தர சத நாமாவளி ..... | 24 |
| 16. ஸ்ரீ சாயிபாபா ஆரத்தி பாடல் ..... | 27 |
| 17. ஸ்ரீ சாயிபாபாவிற்கு நிவேதனம் ..... | 29 |
| 18. ஸ்ரீ சாயிபாபாவின் ஆரத்தி ..... | 29 |
| 19. ஸ்ரீ சாயி நாம தியானம் ..... | 30 |
| 20. ஸ்ரீ சாயி பிரார்த்தனை ..... | 30 |
| 21. ஸ்ரீ சாயிநாதர் அஷ்டகம் ..... | 31 |
| 22. ஸ்ரீ சாயி நூற்றியெட்டு குரு ஓம் ..... | 33 |
| 23. ஸ்ரீ சாயிபாபாவின் அமுத மொழிகள் ..... | 37 |
| 24. விரத நிறைவுப் பதிவேடும் குரு பூர்ணிமா தினம்..... | 50 |
| 25. சாயி சரணம் ..... | 51 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. ஷீரடி சாயிபாபா வாழ்க்கை வரலாற்றின் சுருக்கம்

**ஷீரடி மகானின் தோற்றம் :**

..................................................................................

பாரத மக்களாகிய நாம் வாழும் இப்புண்ணிய பூமியில் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள அகமதாபாத் மாவட்டத்தில், ஸாயிபாபா ஒரு சின்னஞ்சிறு குக் கிராமமான ஷீரடியில் 16 வயது நிரம்பிய வாலிபனாக, கடவுளின் அவதார புருஷனாக பாமர மக்களின் முன்னி லையில் காட்சி அளித்தார். ஷீரடி மிகவும் எளிமையான மக்கள் வாழும் ஊர். அங்கு ஒரு வேப்பமரம், மசூதி, ஆஞ்சநேயர் கோவில் மற்றும் பல சிறு சிறு கோயில்கள் அருகாமையில் இருந்திருக்கின்றது. அவர் காலம் 1854ம் ஆண்டு அவர் வேப்ப மரத்தடியில் தியான நிலையில் அமர்ந்திருந்த காட்சியை மக்கள் பார்த்து வியந்தனர். கடும் குளிர், வெப்பம், பகல், இரவு எந்தச் சூழ்நிலையிலும் பாதிக்காது நல்ல அழகும், சுறுசுறுப்பும் உள்ளவனாக காட்சி அளித்தான். இந்த காட்சி மக்களுக்கு புரியாத புதிராகவும் இருந்து வந்தது.

சில நாட்களிலேயே அந்த ஊர் மக்கள் அவரை "சா" என்றழைத்தார்கள். "சா" என்றால் கடவுள் என்று பொருள். அம்மக்கள் பாபாவை நம் காலத்தில் தோன்றிய அவதார புருஷன் என்று போற்றினார்கள். ஆரம்ப காலத்தில் "ஸாயிபாபா"சில வீடுகளில் பிட்சை கேட்பதை வழக்கமாக வைத்து வாழ்க்கையை ஓட்டினார். சில வீடுகளில் பிச்சை கேட்டால் இல்லை என்று ஒருசில பெண்கள் கூறிவிடுவார்கள். அவர் அவற்றைப் புரிந்து கொண்டு, உன் வீட்டில் இன்ன சமையல் என்பதையும் ஞான நிலையில் கூறிவிடுவார். அப்பெண்கள் வியந்து போய் பாபாவைத் தேடி வந்து உணவு அளிக்க ஆரம்பித்தனர். பாய்ஜாபாய் என்ற பெண்மணி நாள்தோறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு கொடுத்தாள். அவளுக்கு பாபா ஆசீர்வதித்தார். சாந்த்பட்டேல் என்பவர் காட்டு வழியில் சென்று கொண்டிருந்த போது புகைபிடிக்க நெருப்பு இல்லையே - தீக்குச்சி இல்லையே என்ற சமயம் பாபாவிடம் சென்று நெருப்பு கேட்க அவர் தம் கையில் உள்ள 2 கம்புகளை வைத்து தீயை வரவழைத்துக் கொடுத்தார். மிக அதிசயத்தோடு சாந்த்பட்டேல் பாபாவைத் தரிசித்து அவர் காலடியில் விழுந்து வணங்கினார். மிக உயர்ந்த குடும்பத்தில் பிறந்த ராதாகிருஷ்ணமாயி என்ற பெண் சேவை நோக்கத்தோடு தாமாகவே முன்வந்து ஆசிரமத்தை நாள்தோறும் பெருக்கிச் சுத்தம் செய்தார். சீரடி தாம் வைத்திருந்த மந்திர மண்பானையில் சமைப்பார். ஒவ்வொரு முறையும் அவர் சமைத்த உணவு எத்தனைபேர் வந்தாலும் போதுமானதாய் வளர்ந்து கொண்டிருக்கும். **ஒரு சத்புத்திரரின் கை அன்னபூரணியில் அட்சய பாத்திரத்தை திறந்துவிடும் என்பதுதான்.**

சாய்பாபாவுக்கு குழந்தைகளிடம் விளையாடி மகிழ்விப்பதில் அதிக ஆர்வம். நகைச்சுவையுடன் பேசி சிரிக்க வைப்பார். சாயிபாபா தன் பக்தர்களின் ஆனந்த மயான பாடல்களைக் கேட்டு களிப்பார். ஊக்கமும், உற்சாகமும் கொடுத்து அவர்களையும், கலைகளையும் மகிழ்ச்சி ஏற்படுத்துவார். அவர் இசையின் மூலம் தெய்வீக அனுபவம் பெற்றார். நடராஜர் போல் உலகங்களையும் ஆட்டி வைத்திருக்கும் நடனத்தின் மூலம் தன்னுள் ஐக்கியமாகி விடுவார். பாபா துன்பப்படுபவர்களுக்கு ஒரு தாயைப் போல் இருந்து தம் அன்பையும் ஆதரவையும் அளித்து வந்தார். தொழுநோயாளியின் கால் புண்ணைக் கூட கழுவிச் சிகிட்சை புரிந்தார். அவர் சாஸ்திரங்கள், கீதை, குர்ரான் ஆகியவற்றைப்பற்றி முழுவதும் அறிந்து வைத்திருந்தது பெரும் பண்டிதர்களைக் கூட ஆச்சரியத்தில் மூழ்கச் செய்வதாய் இருந்தது. அவர் அவதார நாயகர் ஆதலால் எளிதாக இருந்தது.

துவாரகாமாயி தர்பாரில் பாபா வீற்றிருந்தார். அவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் சாய் மகராஜ் என்று போற்றி வாழ்த்தி வழிபட்டனர். அனைத்து நோய்களுக்கும் மக்கள் விபூதியை அருமருந்தாகக் கருதி எடுத்துக் கொண்டனர். நூறு ஆண்டுகளுக்கு முன் பாபா மூட்டிய நெருப்பிலிருந்து எடுக்கப்படும் சாம்பல் தான் விபூதி. மகாராஜா போல பாபா தன் பக்கதர்களுடன் துவாரகாமாயிலிருந்து சாவடிக்கு ஊர்வலமாக செல்வது அற்புத காட்சியாய் இருக்கும். பாபா விதைக்கும் ஒவ்வொரு விதையும் முளைத்து செடிகளாகி, மரங்களாகிப் பூத்துக் குலுங்கும். அவரின் கைகளை பசுமை நிறம் வீசும் மரகதக் கைகள் என்றே சொல்லலாம். 1918 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18ம் நாள் சீரடி கிராமத்திற்கு பெரும் துயர நாள் ஆகும். இது பாரத தேசத்திற்கே நேர்ந்த துயரநாள் ஆகும். ஆயிரமாயிரம் பக்தர்களுக்கு விபூதி கொடுத்து உபதேசங்கள் புரிந்து, பேருதவியாய் விளங்கிய பாபாவின் உயிர் அன்று பிரிந்தது. அன்று முதல் அவர் ஆத்மா அங்கு நின்று நம்மைக் காத்து ரட்சித்து வருகிறது.

## 2. ஸ்ரீ சாயிமகான் உறுதி மொழிகள்

1. ஷீர்டியில் காலடிபடும் பக்தனுக்கு வரும் ஆபத்து விலகி விடும்.
2. என் சமாதியின் படி ஏறுபவனின் அனைத்து துக்கங்களும் போக்குவேன்.
3. இவ்வுலகை விட்டு என் பூதவுடல் மறைந்தாலும் பக்தன் அழைத்தால் ஓடோடி வருவேன்.
4. திட பக்தி, நம்பிக்கை, விசுவாசத்துடன் யாசிப்பவன் ஆசையை என் சமாதி பூர்த்தி செய்யும்.
5. இன்னும் நான் உயிருடன் இருக்கிறேன் என்று எப்பொழுதும் உணரவும். இதனை சத்திய மென்றறிருந்து அனுபவம் பெறுவீர்.
6. என்னை சரணடைந்தும் வெறும் கையோடு திரும்பினான் என்று எந்த பக்தனாவது இருந்தால் அவனை எனக்குக் காண்பியுங்கள்.
7. பக்தன் என்னை எப்படிப்பட்ட பக்தியுடன் உணருகிறானோ, அப்படிப்பட்ட அனுபவங்கள் அவனுக்குத் தருவேன்.
8. எப்பொழுதும் உங்கள் சுமைகளை நான் சுமக்கிறேன். என் வாக்குப் பொய்யாவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. நீங்கள் கேட்பது எல்லாம் நான் கொடுப்பேன். என் உதவியையும். அருளையும் அள்ளித்தர நான் காத்திருக்கிறேன்.

10. பக்தியுடன் என் மொழிகளை மனதில் ஏற்பவனுக்கு நான் கடன்பட்டவன் ஆவேன்.

11. என் திருவடிகளை அடைந்த பக்தன் பெரும் பாக்கியவான் ஆவான்.

## 3. சாயிமகான் விரத விதிமுறைகள்

1. இந்த விரதத்தை ஆண், பெண், குழந்தைகள் யார் வேண்டுமானா லும் கடைப்பிடிக்கலாம்.

2. இந்த விரதத்தை ஜாதி, மத பேதமின்றி எந்த சார்பினரும் ஏற்கலாம்.

3. இந்த விரதம் அற்புதப் பலன்கள் தரவல்லது. 9 வியாழக் கிழமைகள் விதிமுறைப்படி விரதம் இருந்தால் நிச்சயமாக விரும்பிய எண்ணங்கள் நிறைவேறும்.

4. விரதத்தை எந்த ஒரு வியாழக்கிழமையானாலும், ஸாயிநாமத்தை எண்ணி ஆரம்பிக்கலாம். எந்த காரியத்திற்காக ஆரம்பிக்கி றோமோ, அதை தூய மனதில் ஸாயிபாபாவை எண்ணிப் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.

5. காலை அல்லது மாலையில் ஸ்யிபாபாவின் போட்டோவிற்கு பூஜை செய்ய வேண்டும். ஒரு தூய ஆசனத்தில் அல்லது பலகையில் மஞ்சள் துணியை விரித்து அதன் மேல் ஸாயிபாபா போட்டோவை வைத்து தூய நீரால். துணியால் துடைத்து, சந்தனம், குங்குமம் வைத்து திலகம் இட வேண்டும். மஞ்சள் நிற மலர்கள் அல்லது மாலை அணிவிக்கவும், ஊதுபத்தியும், தீபமும் ஏற்றி ஸாயிவிரத கதையைப் படிக்கவும். ஸ்யிபாபாவை ஸ்மரணை செய்யவும். பிரசாதத்தை பழங்கள், இனிப்புகள், கற்கண்டு எதுவானாலும் நைவேத்தியம் வைத்து விநியோகிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. இந்த விரதத்தை பழ. திரவிய ஆகாரங்கள் (பால், தேநீர், காபி, பழங்கள், இனிப்புகள்) உட்கொண்டு செய்யவும். அப்படி நாள் முழுவதும் செய்ய முடியாதவர்கள் ஏதாவது ஒரு வேளை (மதியமோ, இரவோ) உணவு அருந்தலாம். நாள் முழுவதும் வெறும் வயிற்றோடு பட்டினியாக இந்த விரதம் செய்யவே கூடாது.

7. 9 வியாழக்கிமைகளும் நிறைவுற்றதும் ஸ்யிபாபா கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்யவும். முடியாதவர்கள் (கோவில் அருகில் இல்லை என்றால்) வீட்டிலேயே ஸாயி - பாபாவின் பூஜையை பக்தி சிரத்தையுடன் செய்யவும்.

8. வெளியூர் செல்வதானாலும் இந்த விரதம் கடைப்பிடிக்கலாம்.

9. விரதத்தின் 9 வாரங்களில் பெண்களுக்கு மாத விலக்கு அல்லது இன்ன பிற காரணங்களாலே விரதம் செய்ய முடியவில்லை என்றால் அந்த வியாழக்கிழமையை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் இன்னொரு வியாழக்கிழமையை விரதம் இருந்து 9 வியாழக்கிழமைகள் நிறைவு செய்யவும்.

## 4. விரத நிறைவு (உத்யானம்) விதிமுறைகள்

1. 9 வது வியாழக்கிழமை விரதத்தை நிறைவு செய்ய வேண்டும். அன்று 5 ஏழைகளுக்கு உணவு அளிக்க வேண்டும். (உணவு தங்களால் இயன்றது) நேராக உணவு அளிக்க முடியாதவர்கள் யார் மூலமாகவும் பணமோ, உணவுப் பொருளோ கொடுத்து உணவு அளிக்க ஏற்பாடு செய்யவும்.

2. ஸாயிபாபாவின் மஹிமை மற்றும் விரதத்தைப் பரப்புவதற்காக, நம்முடைய வீட்டிற்கு அருகில் வசிப்பவர், சொந்த பந்தம், தெரிந்தவர் என்று இந்த விரதப் புத்தகங்களை 5, 11 (அல்லது) 21 என்று தங்களால் இயன்ற அளவு நிவியோகம் செய்யலாம்.

3. 9 வது வியாழக்கிழமை விநியோகிக்கும் புத்தகங்களை அன்று பூஜையில் வைத்து பிறகு விநியோகிக்கவும். இதனால் புத்தகத்தைப் பெறும் பத்தரின் விருப்பங்களும் ஈடேறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேற்கூறிய விதிமுறைகளின்படி விரதமும், விரத நிறைவும் செய்தால் நிச்சயமாக எண்ணிய காரியம் நிறைவேறும். இது ஸாயிபக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.**

## 5. ஸ்ரீ சாயி விரத கதை

மனோகரி என்ற பெண்மணியும் அவர் கணவர் மஹேஷும் குஜராத்தில் ஒரு ஊரில் வசித்து வந்தனர். இருவரும் மிகவும் அன்யோன்யமாக இருந்து வந்தனர். ஆனால் மஹேஷ் அவர்களோ சுபாவத்தில் மிகவும் சண்டைக்காரராக இருந்தார். வரைமுறையற்ற பேச்சு, சிடுமுஞ்சித்தனம் நிறைந்தவராக இருந்தார். அவரது சுபாவத்தினால் அக்கம் பக்கத்தினர் தொல்லை அடைந்தனர். ஆனால் மனோகரி அம்மாளோ மிகுந்த ஒழுக்கநெறியுள்ள பெண்மணியாக இருந்தார். இறைவன் மேல் தீரா நம்பிக்கை கொண்டு அனைத்தையும் சகித்துக் கொண்டு இருந்தார். கொஞ்சம் கொஞ்சமாக அவர் கணவரின் வியாபாரம் நஷ்டமடைய ஆரம்பித்து நாளடைவில் ஒரேயடியாக வருமானமும் நின்று போய்விட்டது. மஹேஷ் வீட்டிலேயே இருக்கத் தொடங்கினார். அதனால் அவரது சுபாவம் மேலும் மோசமடைந்தது. முன்பை விட அதிக சிடுமூஞ்சி ஆனார்.

ஒரு நாள் மதிய நேரம், முதிய சாது ஒருவர் அவர் வீட்டு கதவருகில் நின்றார். முகத்தில் அபூர்வமான ஒளியும், தேஜஸும் நிறைந்து இருந்தது. அவர் மனோகரி அம்மாளிடம் சாதம், பருப்பு அளிக்கும்படிக் கூறினார். மனோகரி அம்மாளும் சாதம், பருப்பு அளித்து இரு கைகூப்பி நமஸ்காரம் செய்தார். சாதுவும், "சாயி உங்களை சுகமாக வைப்பார்" என்று ஆசீர்வதித்தார்.

மனோகரி அம்மாளும், "ஐயனே! சுகம், சாந்தி எங்கள் விதியிலேயே இல்லை போன்றிருக்கிறது' என்று தன் துன்பம் நிறைந்த கதையைக் கூறி வருந்தினார்.

சாதுவும் ஸ்ரீ சாயிபாபாவின் விரதத்தைப் பற்றிக் கூறலானார். 9 வியாழக்கிழமைகள் பழ, திரவிய ஆகாரங்கள் அல்லது ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளை உணவு உட்கொண்டு, முடிந்தால் சாயிபாபாவின் கோயிலுக்குச் செல்லவும். வீட்டிலேயே சாயிபாபாவிற்கு 9 வாரங்கள் பூஜை செய்யவும். சாயி விரதம் 9 வாரங்கள் செய்து, விதிமுறைப்படி நிறைவு செய்யவும். ஏழைகளுக்கு உணவு அளித்து. சாயி விரத புத்தகங்களை தன்னால் இயன்ற அளவு 5, 11, 21 என்ற எண்ணிக்கையில் மக்களுக்கு விநியோகிக்கவும். இப்படி சாயி விரதத்தின் மகிமையைப் பரப்பினால் சாயிபாபா உங்கள் அத்தனை ஆசைகளையும் நிறைவேற்றுவார். இந்த விரதம் கலியுகத்திற்கு ஏற்ற மிக உன்னதமாக அற்புதங்கள் நிகழ்த்தும் விரதம். இந்த விரதம் கண்டிப்பாக அனைவருக்கும் மிகுந்த பலன்கள் அளிக்கவல்லது. ஆனால் விரதமிருப்போர் சாயிபாபாவின் மேல் உறுதியான நம்பிக்கையும், பக்தியும் வைத்தல் மிகவும் அவசியம். பொறுமையும் மிக மிக அவசியம். யார் மேற்கூறியபடி விரதமும், நிறைவும் செய்கிறார்களோ அவர்களுடைய விருப்பங்களை சாயிபாபா நிச்சயம் நிறை வேற்றுவார் என்று ஆசீர்வதித்து விட்டுச் சென்றார்.

மனோகரி அம்மாளும் 9 வியாழக்கிழமைகள் விரதம் இருந்து 9வது வியாழனன்று ஏழைகளுக்கு உணவு அளித்தார். சாயி விரதப் புத்தகங்களை விநியோகித்தார். அவர்கள் வீட்டில் சண்டை, சச்சரவு பெயரளவுக்குக்கூட இல்லாமல் போய்விட்டது. வீட்டில் பெரும் சுகம், அமைதி, ஆனந்தம் நிலவியது. அதே சமயம் மஹேஷின் சுபாவமும் மாறி, அவருடைய வியாபாரமும் நன்கு நடந்தது. சிறிது நாட்களிலேயே ஆனந்தமும். செல்வமும் பெருகியது. கணவன், மனைவி இருவரும் ஆனந்தமாய் வாழலாயினர்.

ஒரு நாள் மனோகரி அம்மாளின் மைத்துனரும், மைத்துனர் மனைவியும் தூரத்திலிருந்து வந்தனர். பேச்சோடு பேச்சாக, தங்கள் குழந்தைகளால் படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை என்றும், பரீட்சையில் சித்தியடையவில்லை என்றும் கூறி வருத்தப்பட்டனர். மனோகரி அம்மாள் 9 வியாழக்கிழமைகள் விரதத்தின் மகிமையைக் கூறினார். சாயி பக்தியினால் குழந்தைகள் நன்கு படிக்கத் துவங்குவர் ஆனால் சாயிபாபாவின் மேல் அதீத விசுவாசமும். நம்பிக்கையும் வைத்தல் அவசியம். சாயி அனைவருக்கும் அருள்புரிபவர் என்றும் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மனைவி விரத விதிமுறைகளைக் கேட்டார். மனோகரி அம்மாள் கூறலானார். "9 வியாழக்கிழமைகள் பழ, திரவிய ஆகாரங்களை உட்கொண்டு, முடியாதவர்கள் ஒருவேளை உணவு அருந்தி இந்த விரதம் செய்ய வேண்டும். 9வியாழக் கிழமை களும் சாயிபாபா கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்து வரவும்"

மஞ்சள் நிற மலர்கள் (அல்லது) மாலை அணிவித்து, தீபம், ஊதுபத்தி ஏற்றி, பிரசாதம் நிவேதனம் செய்து, பின் விநியோகம் செய்து சாயிபாபாவை ஸ்மரணை செய்யவும்.

சாயி விரத பூஜை கதை, சாயி ஸ்மரணை, சாயி பாமாலை, சாயி பாவனி இவற்றைப் பக்தியுடன் படிக்கவும்.

சூரத்திலிருந்து அவர் மைத்துனர் மனைவியின் கடிதம் சிறிது நாட்களிலேயே வந்தது. அதில் அவர் குழந்தைகள் சாயி விரதம் இருப்பதாகவும் மிக நன்றாக படிக்கத் தொடங்கினர் என்றும் எழுதி இருந்தார். மேலும் அவரும் இந்த விரதம் இருந்ததாகவும், விரத புத்தகங்களை அலுவலகத்தில் விநி யோகம் செய்ததாகவும் எழுதி இருந்தார். அதைப் பற்றி அவர் எழுதுகையில் அவர் தோழி சாருவின் மகளும் சாயி விரத பலனாக மிக நல்லஇடத்தில் வரன் அமைந்து நல்ல விதமாகத் திருமணம் நடந்தது. அவரது பக்கத்து வீட்டில் வசிப்பவரின் நகைப்பெட்டி தொலைந்து போய்விட்டது. அவரும் சாயி விரதம் இருந்தார். 2 மாதங்களுக்குப் பிறகு நகைப்பெட்டி திரும்பக் கிடைத்துவிட்டது. (யார் திருப்பிக் கொண்டு வைத்தார் என்று தெரியாது). இப்படிப் பல அற்புதங்கள் நடந்தன.

மனோகரி அம்மாளும் சாயி விரத மகிமையை நன்கு புரிந்து கொண்டார். **ஓ! சாயி!** இப்படி எல்லோர் மேலும் பொழியும் கருணை என்மேலும் பொழிவீராக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. ஸ்ரீ ஷீர்டி சாயிபாபாவின் மூல மந்திரம்

**ஓம் ஸாயி நமோ நமோ**
**ஸ்ரீ ஸாயி நமோ நமோ**
**ஜெய ஜெய ஸாயி நமோ நமோ!**

## 7. ஸ்ரீ சாயிநாதர் திருவடி

ஸாயி நாதர் திருவடியே
ஸம்பத் தளிக்கும் திருவடியே
நேயம் மிகுந்த திருவடியே
நினைத்த தளிக்கும் திருவடியே
தெய்வ பாபா திருவடியே
தீரம் அளிக்கும் திருவடியே
உயர்வை யளிக்கும் திருவடியே

## 8. ஸ்ரீ ஷீர்டி சாயிபாபாவின் காயத்ரி

ஓம் ஸ்ரீ ஷீரடி ஸாயி ஸ்ரீநிவாஸாய வித்மஹே!
ஸர்வ தேவாய தீமஹி
தந்தோ ஸர்வப்ரசோதயாத்!

## 9. ஸ்ரீ ஷீர்டி சாயிபாபாவின் த்யான ஸ்லோகம்

பத்ரி க்ராம ஸமத் புதம்
த்வாரகா மாயீ வாசினம்
பக்தா பீஷ்டம் இதம் தேவம்
ஸாயி நாதம் நமாமி :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. ஸ்ரீ சாயி ஸ்மரணை

வாரும் சாயி, வாரும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!
பக்தர் உம்மை அழைக்கின்றோம்!
விருப்பம் ஈடேற வேண்டும்!
பக்தி பலமுற வேண்டும்!
வாரும் சாயி, வாரும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி! 1

துக்கம் போக்க வாரும் சாயி!
ஆனந்தம் அளிக்க வாரும் சாயி!
சேய் உமை அழைத்தேன் சாயி!
தாய் மனதோடு இளகுவாய் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி! 2

கீர்த்தனம் சாயி, பூஜை சாயி!
வாழ்வும் சாயி, வளமும் சாயி!
ஆனந்தம் சாயி, செல்வம் சாயி!
அற்புதம் சாயி, அபயம் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி! 3

ஷீர்டி வாசி எங்கள் சாயி!
பக்தரின் இனிய அன்பர் சாயி!
கருணைக் கடலே எங்கள் சாயி!
அருள் பார்வை பாரும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி! 4

கிழக்கும் சாயி மேற்கும் சாயி!
வடக்கும் சாயி தெற்கும் சாயி!
எத்திசையில் நீ இருந்தாலும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி! 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹிந்து சாயி, முஸ்லிம் சாயி!
ஜீவன் சாயி, யாத்திரை சாயி!
யேசு சாயி, குருநானக் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி! 6

தர்மம் சாயி! கர்மம் சாயி!
தியானம் சாயி! தானம் சாயி!
தூணிலும் சாயி! துரும்பிலும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி! 7

திருப்தி சாயி முக்தி சாயி!
பூமி சாயி ஆகாயம் சாயி!
சாந்தி சாயி ஓம் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி! 8

சத்யம் சாயி, சிவம் சாயி!
சுந்தரம் சாயி, ஈஸ்வரன் சாயி!
இரக்கம் சாயி, எளியவர் சாயி!
அன்பு சாயி, அமைதி சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி! 9

சக்தி சாயி பக்தி சாயி!
சிவன் சாயி விஷ்ணு சாயி!
ப்ரஹ்மா சாயி பஞ்சபூதம் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி! 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. ஸ்ரீ சாயிபாபா பாமாலை

ஷீர்டியே உலகின் அழகிய புனிதத்தலம் I
ஸ்ரீ சாயிபாபா அவதரித்து அருளிய தலம் II
கல்பதருவினும் பேறு பெற்ற வேப்ப மரம் I
அதன் மடியில் அமர்ந்தாரே இறைவனின் வரம் II
பதினாறு வயதே நிரம்பிய பாலகனாம் I
பல சூரிய சந்திரர் சேர்ந்த ஒளிப்பிழம்பாம் II
ஞானம், அழகு நிறைந்த ஆண்டவர் மகனாம் I
நீர் அமர்ந்ததும் கசப்பு வேம்பும் இனிப்பானதாம் II
திருவே அமர்ந்தாள் உன் நெற்றியில் திலகமாய் I
தேஜஸ், ஸெளம்யம் நிறைந்த உருவமாய் II
வெயில், மழை பாராமல் தவமும் செய்தாய் I
பாலகன் ரூபத்திலே உலகில் தோன்றினாய் II
உன் தாய், தந்தை, குலம் யாரும் அறியாரே I
உலகம் என் வீடு, இறை என் தாய் என்றாயே II
சிலர் மொழிந்தனர் நீ சிவனின் ரூபம் I
சிலர் அறிந்தனர் நீ விஷ்ணுவின் ரூபம் II
தத்தாத்ரேய ரூபமோ? ஸ்ரீ ராமனே நீதானா? I
பீர் அவுலியாவோ? பரப்ரஹ்மமே நீதானோ? II
எந்த ரூபமானாலும் நியே எங்கள் தெய்வமானாய் I
பக்தனின் இஷ்ட ரூபத்திலே தரிசனமும் அளிப்பாய் II
எத்தனை எத்தனை லீலைகள் புரிந்தாய் I
எண்ணற்ற ஏழைகளின் துன்பங்கள் துடைத்தாய் II
தெவிட்டாத இன்பமன்றோ உந்தன் திருக்கதைதான் I
கேட்பவரும் திளைப்பரே கானில் தேனருவி தான் II
மத, ஜாதி பேதங்களால் அழியும் மானிடம் I
உய்வுற உறவுப்பாலம் அமைத்த மஹா அவதாரம் II
சாந்த் படீலின் குதிரையை தேடித் தந்தாய் I
திருமண வீட்டாரோடு ஷீர்டியை அடைந்தாய் II
ஆன்மீகத் தேடலில் அனைவரையும் அழைத்தாய் I
அருளோடு சேர்ந்து அற்புத அநுபவங்களும் தந்தாய் II
மதூதித்தாயாம் துவாரகமாயி! அதில் வசித்து, I
பக்தர்களை ரட்சிக்கும் நீ அன்னையன்றோ?சாயி II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கரமளித்த உதி அருமருந்தாகும் - உன் I
திருஅருட்பார்வை துயரினைப் போக்கும் II
அருள் துனியில் எங்கள் பாபங்கள் தூசாகும்- உன் I
திருப்பாதங்கள் தொட்ட ஷீர்டி சொர்க்கமாகும் II
அடைக்கலம் புகுந்தோரை அன்புடன் ரட்சித்தாயே உன் I
அற்புத லீலைகள் அமுதே! அமுதினும் இனிய பேரமுதே II
நீரூற்றி அகல்தீபங்கள் எரியச் செய்தாய் I
ஒளிஜோதியிலே அஞ்ஞான இருள் களைந்தாய் II
பக்தனின் கண்கள் நீர் சொரிந்தாலே அக்கணமே I
துயர் துடைக்க அவன் அருகில் நிற்பாயே II
தாமு அண்ணா ஜாதகத்தில் ஒரு கோளாறு I
வருந்தி அழுதார் இல்லையே புத்திரப்பேறு II
உன் திருவடி அடைந்தார்க்கு இல்லை ஜாதகமே I
அளித்தாய் மாங்கனிகள் ! அடைந்தார்தாமு சந்தானமே II
விதியையும் மீறும் உன் அற்புத அருளுமே I
நம்பிக்கையுடன் பக்தன் உன்னை பணிந்திட்டாலே II
சிவபக்தன் மேகாவையும் நீ சினந்தாயே, I
உன்னை முஸ்லிம் என்று பேதம் கொண்டதாலே II
பக்தருக்குள்ளே இல்லையே ஏற்றத்தாழ்வே I
மேகாவுக்கும் நீ இரக்கம் காட்டினாயே II
உள்ளேயே அவனை நீ உருமாற்றினாயே I
உன்னில் சிவம் கண்டு அவன் இறை அடைந்தானே II
கங்கை, யமுனை நீர் உன் பாதத்தில் சொரிந்தாயே I
தாஸ்கணுவின் பிரயாகை தாகம் தணித்தாயே II
மசூதியில் அமர்ந்து நீ அளித்தாய் ஞானோபதேசம் I
பசியுற்றோருக்கு செய்வீர் அன்னதானம் II
ஏழைகள் மேல் இரக்கம் கொள் என்றாயே I
உண்மையே சொல், நேர்மையாய் வாழ் என்றாயே II
ஷீர்டியின் கல், புல் கூட பேறு பெற்றதே I
உன் திருவடி முத்தமிட்டு இறைவனை அடைந்ததே II
அப்புல்லும், கல்லுமாய் நானிருந்தாலே உன் I
திருவடியை என் சிரஸேந்தி களித்திருப்பேனே II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை தவம் செய்தேன் நான் அறியேனே I
இக்கணம் உனைத்தொழும் பேறு பெற்றேனே II
இறையருள் பெற்ற மனிதரால் மட்டுமே I
உன்னை பூஜிக்கும் பாக்கியம் கிட்டிடுமே II
உன் அருட்பார்வை என்மேல் பட்டாலே I
என் தீவினை போய் ஆனந்தம் நிறைந்திடுமே II
உன் மென்கரங்கள் என் சிரஸின் மேல் வைப்பாயே I
உத்தமன் நினைத் தொழுகின்றோம் செவிமடுப்பாயே II
உன் பாதாரவிந்தம் தொட்ட தூசு ஒன்று போதுமே, I
என் கண்களிலே ஒற்றிக் கொண்டாடிடுவேனே II
உன் பதகமலத் தீர்த்தம் என் நாவில் பட்டாலே I
நான் பெற்ற இன்பத்தை பாடிக் களித்திடுவேனே II
என் கனவினில் என்னை ஆட்கொள்வாயே I
நிஜந்தனிலே நிகழும் என் துணை நிற்பாயே II
அணுவிலும் அணுவானாய், அகில அண்டமும் நீயானாய் I
எங்கெங்கு நோக்கிலும் நீயே நிற்கின்றாய் II
என் அன்னை நீ! தந்தை நீ ! இவ்வுலகையே I
மூவடியாய் அளந்திட்ட திருமாலும் நீ II
அகிலம் உன் இல்லம், அண்ட சராசரம் உன் ரூபம் I
அடியார்க்கு அருள அல்லவா நீ எடுத்தாய் அவதாரம் II
குசேலனையும் குபேரனாக்கும் சக்தி இருந்துமே, I
உன் உணவை பிச்சை எடுத்து உண்டாய் II
சாயி நாமமே போக்கிடும் பல துக்க I
சாயி நாமமே அளித்திடும் பரம சுகங்கள் II
சாயி நாமத்தினால் வியாழன் விரதம் பூண்டாலே I
சாயி நாமம் நல்கும் பல நன்மைகளுமே II
நோயுற்றோர் பிணி வேதனை நீங்கிடுமே I
துயருற்றோர் துன்பங்கள் தொலைந்திடுமே II
சாயி கிருபையால் தரித்திரம் மறைந்திடுமே I
சாயி விரதத்தால் சுகம், சாந்தி வீட்டில் நிலவிடுமே II
சாயி நாமம் தினமும் ஜபித்தாலுமே I
ஒன்பது வியாழன் சாயி விரதம் பூண்டாலுமே II
சாயி வருவார், இரங்குவார் நம்மிடமே, I
துன்பம் களைவார், தருவார் ஆனந்தமே II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயியே சாச்வதம்! சாயியே சத்தியம்! I
இதை நம்புபவன் வாழ்விலில்லை பெருந்துன்பம் II
சாயியே பரமேஸ்வரன், சாயியே பரமாத்மன் I
சாயியே பராசக்திரூபன், சாயியே பரந்தாமன் II
நம்பிக்கை பக்தி, பொறுமையுடன் சரணடைவோம் I
சாயி அருளால் பரப்ரஹ்மானந்தம் அடைவோம் II

**ஸ்ரீ சாயிநாதருக்கே அர்ப்பணம்.**

.................................................................

## 12. ஸ்ரீ சாயி பாவனி

ஜய ஈஷ்வர் ஜய சாயிதயாளா I
நீயே ஜகத்தின் பாதுகாப்பாளர் II 1
தத்த திகம்பர ப்ரபூ அவதாரம் I
இவ்வுலகமே உந்தன் கைவசம் II 2
ப்ரஹ்மாச்யுத சங்கர அவதாரம் I
சரணடைந்தோரின் பிராணாதாரம் II 3
தரிசனம் தாரீர் ஓ! என் பிரபுவே I
போதும் இந்த பிறவிப்பிணியுமே II 4
வேப்ப மரத்தினடியில் தோன்றினாய் I
கிழிந்த கப்னியே பொன்னாடையாய் II 5
பிஷைபை தோளின் அணிகலனாய் I
பக்கிர் ரூபத்தில் வலம் வந்தாய் II 6
கலியுகத்தில் நீ அவதரித்தாய் I
ஏழை எளியோரை உய்வித்தாய் II 7
ஷீர்டியில் வாசம் செய்தாய் I
ஜனங்களின் மனதை கொள்ளை கொண்டாய் II 8
குழலூதும் கண்ணனும் நீயானாய் I
வில்லேந்திய ராமனும் நீயானாய் II 9
தயை நிரம்பியதே உந்தன் விழிகள் I
அமுதம் சொரிந்ததே உந்தன் மொழிகள் II 10
புண்ய தலமானதே துவாரகமாயி I
அங்கு வசித்தாரே எங்கள் சாயி II 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாபாவின் துனி அங்கு எரியும் I
நம் பாபங்கள் அங்கு தூசாகும் II 12
வழிதவறிய அடியேன் பெருமூடன் I
நீயே எம்மை வழிநடத்தும் ஆசான் II 13
பல்லாயிரம் பக்தர் உனைப் பணிந்தனரே I
கருணாமூர்த்தி எனை நீ மறவாதே II 14
மூலே சாஸ்திரி என்ற அந்தணஸ்வாமி I
உன்னில் கண்டார் குரு கோலப்ஸ்வாமி II 15
விஷப்பாம்பு ஷமாவை தீண்டியுமே I
விஷமிறக்கி அருளினாய் ஜீவனுமே II 16
பிரளய மழையை சொல்லால் தடுத்தாய் I
பக்தர்களை முக்தர்கள் செய்தாய் II 17
கோதுமையை அரைத்தாய் அரவையிலே I
அரவையில் காலராவும் அரைந்ததே II 18
உன் திருவடியில் வைத்தேன் என் சிரம் I
மனமிரங்கி அருளும் எனக்கு வரம் II 19
மனதின் விருப்பம் நிறைவேற்றுவாய் I
பிறவிக்கடலின் துன்பம் நீக்குவாய் II 20
பக்த பீமாஜியும் நோயால் தவித்தான் I
பலவிதமாய் சிகிச்சைகள் எடுத்தான் II 211
உந்தன் பவித்ர உதி உண்டான் I
ஷய ரோகம் போய் சுகமாய் ஆனான் II 22
காகாஜி கண்டார் உன் திவ்யரூபம் I
அவருக்கு அளித்தாய் நீ விட்டல் ரூபம் II 23
தாமுவிற்கு அளித்தாய் சந்தானம் I
அவர் மனம் பெற்றதே சந்தோஷம் II 24
கிருபாநிதி, எனக்கு கிருபை செய் I
தீனதயாளா! என் மேல் தயை வை II 25
உடல், பொருள், மனம் யாவும் உமக்கே I
அளித்திடுவாய் நற்கதி எமக்கே II 26
மேகாவும் உன்னை அறியாமலே I
முஸ்லீம் பேதம் கொண்டானே II 27
உன்னில் காட்டினாய் சிவனையுமே I
மேகாவும் அடைந்தான் பரமபதமே II 28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணெய்க்குப் பதிலாய் நீரூற்றியுமே I
ஒளி கொடுத்தாய் நீ ஜோதிக்குமே II 29
அதனைக் கண்டவர் மெய் மறந்தனரே I
கேட்டவர் வியப்பு மாளவில்லையே II 30
சாந்த் படீல் ஆழ்ந்தார் கவலையிலே I
குதிரையை இருமாதம் காணவில்லையே II 31
சாயி, நீ அவனுக்கு இரங்கினாய் I
தொலைந்த குதிரையை மீட்டுத் தந்தாய் II 32
நம்பிக்கை, பொறுமை மனதில் வை I
சாயி, சாயி என்றே தினமும் ஜபம் செய் II 33
ஒன்பது வியாழன் விரதம் செய்வாய் I
வெற்றி நிச்சயம் உமக்கே என்றாய் II 34
தாத்யாவின் உயிர் ஊசலாடியதும் I
தந்தாயே நீ உன் ஆயுளையும் II 35
தாய் பாயாஜா அன்பாய் தந்த ரொட்டி I
தாத்யா உயிரை காத்ததோ? சாயி II 36
பசு, பட்சிகளிடம் இரக்கம் கொண்டாய் I
அன்பாலேயே எமக்கு அரசனானாய் II 37
எல்லோர்பாலும் உன் அருள் நோக்கு I
பக்தனுக்களித்தாய் அமுது வாக்கு II 38
திருவடி பணிந்த பக்தருக்கே I
நீயே தந்தாய் அடைக்கலமே II 39
அமுதினும் இனிய உன் வசனங்கள் I
போக்கும் பக்தனின் மன விசனங்கள் II 40
தூணில் துரும்பில் இருக்கின்றாயே I
உன் லீலைகள் அற்புத பாடங்களே II 41
உன்னைப் பாட சொற்கள் தேடுகிறேன் I
அறிவிலி நான் மடமையில் தவிக்கிறேன் II 42
தீனதயாளா, நீ கர்ணனினும் வள்ளல் I
உன்னைத் துதித்தால் தொலையும் இன்னல் II 43
ஓ! சாயி!! என்மேல் தயை கொள்வாய் I
திருவடிகளில் எம்மை ஏற்றுக் கொள்வாய் II 44
காலை, மாலை எவ்வேளையும் நிதமும் I
சாயி நாமம் நாவும் பாடிட வேண்டும் II 45



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடபக்தியுடன் பாடும் பக்தனுமே I
பரமபதம் நிச்சயம் அடைவானே II 46
தினமும் காலை, மாலை இருவேளையும் I
சாயி புகழ் பாடும் இப்பா வரிகளையும் II 47
பக்தியுடன் பாடுபவன் துணையாவார் சாயி I
அவரே நம்மைப் பெற்ற தாயி II 48
சாயி லீலை உரைக்கும் இப்பதிகங்கள் I
செப்பியவை அனைத்தும் ரத்தினங்கள் II 49
நம்பிக்கை, பொறுமையுடன் சாயியை துதிப்போம் I
தடைகள் நீங்கி வெற்றி அடைவோம் II 50
சாயியே அகண்ட சக்தி ஸ்வரூபம் I
மனதை வசீகரிக்கும் அழகு ரூபம் II 51
தூய மனமுடன் ஸ்மரணை செய் என் மனமே I
தினம் ஜபி சத்குரு சாயி நாமமே II 52

அனந்த கோடி ப்ரஹ்மாண்ட நாயக
ராஜாதிராஜ யோகிராஜ
பரப்ரஹ்ம ஸ்ரீ சச்சிதானந்த சத்குரு
சாயிநாத் மஹராஜ் கீ ஜய்
ஸ்ரீ சத்குரு சாயி நாதார்ப்பணமஸ்து
சுபம் பவது.

## 13. ஸ்ரீ தத்தாரேய பாவனி

ஜய யோகீச்வர தத்த தயாளா.
ஜகத்தினை ஆக்கிய மூலாதாரா II
அத்ரி அநுசூயா கருவியாய் கொண்டாய்.
ஜக நன்மைக்காகவே அவதரித்தாய் II
பிரம்மா, ஹரி, ஹரரின் அவதாரம்.
சரணாகதர்களின் பிரணாதாரம் II
அந்தர்யாமி, சத்சித் ஆனந்தன்,
பிரசன்ன சத்குரு இருதோளுடையன் II
அன்னபூரணியை தொளில் வைத்தாய்,
சாந்தி கமண்டலம் கரமேந்தினாய் II
நாலு, ஆறு, பல தோளுடையான்,
அளவிலா ஆற்றலுடைய புஜமுடையான் II


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்சரண் புகுந்தேன் அறியாமூடன்,
வாரும் திகம்பரா! போகுதே பிராணன் II
அர்ஜீனனின் தவக்குரல் கேட்டு கிருதயுகத்திலே,
அக்கணமே பிரசன்னம் ஆனாயே II
அளவிலா ஆனந்தம், சித்தி அளித்தாய் ,
முடிவில் பரம பத முக்தியும் அளித்தாய் II
இன்று எனக்கருள ஏன் இத்தனை தாமதம்?
உனையன்றி எனக்கில்லை புகலிடம் II
விஷ்ணுசர்மா பக்திக்கிரங்கினாய்,
அவனளித்த சிரார்த்த உணவு அருந்தி ரட்சித்தாய் II
ஜம்ப அரசுரனால் தொல்லை தேவருக்கே
தயை புரிந்தாய் நீ அமரருக்கே II
மாயை பரப்பி திதிசுதனை,
இந்திரன் கரத்தால் வதம் செய்வித்தாய் II
அளவிலா லீலைகள் புரிந்தாயே
அவற்றை வர்ணிக்க இயலுமோ சிவரூபனே II
நொடியில் ஆயுவின் புத்திர சோகம் போக்கினாய்,
மகனை உயிர்ப்பித்து பற்றற்றவனாக்கினாய் II
சாத்யதேவ, யது, பிரஹ்லாத, பரசுராமருக்கே,
போதித்தாய் நீ ஞானோபதேசமே II
அளவிலா அருள் ஆற்றல் உடையோனே
என் குரல் கேட்க ஏன் மறுத்தாயே II
உன் தரிசனம் காணாமல் நானுமே
இறுதி காணேன், வாரீர் இக்கணமே II
த்விஜஸ்திரீயின் அன்பை மெச்சினாயே
பிறந்தாய் நீ அவளின் மகனாகவே II
ஸ்மாத்துகாமி, கலியுக கிருபாளளே,
படிப்பறியா வண்ணானை உய்வித்தாயே II
வயிற்று வலியில் துடித்த அந்தணனைக் காத்தாயே
வல்லபேசனை கயவ, காலனிடமிருந்து காத்தாயே II
என்னைப்பற்றிய அக்கறை உனக்கிலையே
என்னை நினைப்பாய் ஒருமுறையேனுமே II
தழைக்கச் செய்தாயே உலர்ந்த பட்டமரம்
என்னிடம் ஏன் இத்தனை உதாசீனம் II
முதிய மலட்டுப் பெண்ணின் கனவினையே
சேய் அளித்து பூர்த்தி செய்தாயே II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணனின் வெண்குஷ்டம் நீக்கினாயே
அவன் ஆசைகளை நிறைவு செய்தாயே II
மலட்டெருமையை பால் சொரிய வைத்தாய்
அந்தணனின் தரித்திரம் போக்கினாய் II
அவரைக்காய் பிச்சையாய் ஏற்றாய்
அந்தணனுக்கு தங்கக்குடம் அளித்தாய் II
பதி இறந்த பத்தினியின் துயர் துடைத்தாய்,
தத்தன் உன்னருளால் உயிர்த்தெழுந்தான் II
கொடூர முன்வினையைப் போக்கினாய்,
கங்காதரனின் மகனை உயிர்ப்பித்தாய் II
மதோன்மத் புலையனிடம் தோற்றனரே,
பக்த திரிவிக்ரமரை ரட்சித்தாயே II
பக்த தந்துக் தன்னிஷ்டப்படியே
ஸ்ரீசைலம் அடைந்தான் இமைப்பொழுதிலே II
ஒரே நேரத்தில் எடுத்தாய் எட்டு ரூபங்களே,
உருவமற்றும் பலரூபமுடையவனே II
தரிசனம் பெற்று தன்மயமானரே
ஆனந்தம் அடைந்த உன் பக்தருமே II
யவனராஜன் வேதனை நீக்கினாயே
ஜாதிமத பேதம் உனக்கில்லையே II
ராம, கிருஷ்ண அவதாரங்களிலே
நீ செய்த லீலைகள் கணக்கில்லையே II
கல், கணிகை, வேடம், பசு, பட்சியுமே
உன்னருளால் முக்தி அடைந்தனரே II
நாமம் நவிலும் வேஷதாரியும் உய்வானே
உன் நாமம் நல்காத நன்மையில்லையே II
தீவினை, பிணி, துன்பம் தொலையுமே
சிவன் உன் நாமம் ஸ்மரித்தாலே II
பில்லி, வசிய, தந்திரம் இம்சிக்காதே,
ஸ்மரணையே மோட்சம் தந்திடுமே II
பூத, சூனிய, ஐந்து, அசுரர், ஓடிடுமே
தத்தர் குண மஹிமை கேட்டதுமே II
தத்தர் புகழ் பாடும் தத்த பாவனியையே
தூபமேற்றி தினம் பாடுபவனுமே II
இரு லோகத்திலும் நன்மை பெறுவானே
சோகம் என்பதை அறியானே II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோக சித்தி அவன் அடிமையாகுமே
துக்க தரித்திரம் தொலைந்திடுமே II
ஐம்பத்திரு வியாழக்கிழமை நியமுடனே
தத்த பாவனி அன்புடன் படித்தாலே II
நிதமும் பக்தியுடன் படித்தாலுமே
நெருங்கான் அருகில் காலனுமே II
அநேக ரூபமிருந்தும் இறை ஒன்றே
தத்துவமறிந்தவனை மாயை அண்டாதே II
ஆயிரம் பெயரிருந்தும் நீ ஒருவனே
தத்த திகம்பரா நீதான் இறைவனே II
வந்தனம் உனை செய்வேன் பலமுறை நானுமே
வேதம் பிறந்தது உன் மூச்சினிலே II
சேஷனும் வர்ணித்து களைப்பானே
பல ஜன்மமெடுத்த பாமரன் எப்படி வர்ணிப்பேனே II
நாமம் பாடிய அனுபவம் திருப்தி தந்திடுமே
உனை அறியாமூடன் வீழ்ந்திடுவானே II
தவசி தத்வமஸி அவன் இறைவனே
பாடுமனமே ஜயஜயஸ்ரீ குருதேவனே II

## 14. ஸ்ரீ சாயிபாபா புஷ்பாஞ்சலி

ஹரிஹி ஓம் யக்னேன் யக்ஞமயஜந்த தேவாஸ்தானி
தர்மாணி ப்ரமான்யாஸன்ந தேஹ நாகம் மஹிமான
மஹிமான ஸஜந்த யத்ர பூர்வே ஸாத்யா ஸந்தி தேவாஹா
ஓம் ராஜாதிரரிய ப்ரஸஹ்ய ஸாஹினே
நமோ வயம் வைஸ்ரவணாய குர்மஹே ஸமே காமான்
காமகாமாய மஹ்யம் காமேஸ்வரோ வைஸ்ரவணோ
தாது குபேராய வைஸ்ரவணாயா மஹாராஜாய நமஹ
ஓம் ஸ்வஸ்தி ஸாம்ராஜ்யம் பௌஜ்யம் ஸ்வாராஜ்யம்
வைராஜ்யம் பாரமேஷ்ட்யம் ராஜ்யம் மஹாராஜ்யமாதி
பத்ய மயம் ஸமந்தபர்யா யீஸ்யாத் ஸார்வபௌம
ஸார்வாயுஷ் ஆந்ராதாபரார்தாத் ப்ருதிவ்வை ஸமுத்ர
பர்யந்தாயா ஏகராளிதி ததப்யேஷ ஸ்லோகா அபி
கீதோ மருதப்பரிவேஷ்டாரோ மருத்தஸ்யாவஸன் கிருஹே
ஆவிசக்ஷிதஸ்ய காமப்ரேர் விச்வே தேவா ஸபாத இதி
ஸ்ரீ நாராயண வாஸீதேவாய ஸச்சிதானந்த ஸ்த்குரு
ஸாயிநாத் மஹராஜ் கீ ஜெய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. ஸ்ரீ சாயிபாபா அஷ்டோத்தர சதநாமாவளி

1. ஓம் ஸ்ரீ ஸ்ாயிநாதாய நம :
2. ஓம் ஸ்ரீ லஷ்மீ நாராயணாய நம :
3. ஓம் ஸ்ரீ கிருஷ்ண ராம சிவ மாருத்யாதி ரூபாய நம :
4. ஓம் சேஷ சாயினே நம :
5. ஓம் கோதாவரீ தட ஷீரடி வாஸினே நம :
6. ஓம் பக்த ஹ்ருதாலயாய நம :
7. ஓம் ஸர்வ ஹருத்வாஸினே நம :
8. ஓம் பூதாவாஸாய நம :
9. ஓம் பூதபவிஷ்யத் பாவ வர்ஜிதாய நம :
10. ஓம் காலாதீதாய நம :
11. ஓம் காலாய நம :
12. ஓம் காலகாலாய நம :
13. ஓம் காலதர்பதமனாய நம :
14. ஓம் ம்ருத்யுஞ்ஜயாய நம :
15. ஓம் அமர்த்யாய நம :
16. ஓம் மர்த்யாபயப்ரதாய நம :
17. ஓம் ஜீவாதாராய நம :
18. ஓம் ஸர்வாதாராய நம :
19. ஓம் பக்தாவன ஸமர்த்யாய நம :
20. ஓம் பத்தாவன ப்ரதிக்ஞாய நம :
21. ஓம் அன்னவஸ்த்ரதாய நம :
22. ஓம் ஆரோக்யசேஷமதாய நம :
23. ஓம் தனமாங்கல்யப்ரதாய நம :
24. ஓம் ருத்திஸித்திதாய நம :
25. ஓம் புத்ர மித்ர களத்ர பந்துதாய நம :
26. ஓம் யோகசேஷமவஹாய நம :
27. ஓம் ஆபத்பாந்தவாய நம
28. ஓம் மார்கபந்தவே நம :
29. ஓம் புக்திமுக்திஸ்வர்காபவர்தாய நம :
30. ஓம் ப்ரியாய நம :
31. ஓம் ப்ரீதிவர்தனாய நம :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32.ஓம் அந்தர்யாமினே நம :
33.ஓம் ஸச்சிதாத்மனே நம :
34.ஓம் ஆனந்தாய நம :
35.ஓம் ஆனந்ததாய நம :
36.ஓம் பரமேச்வராய நம :
37.ஓம் பரப்ரம்ஹணே நம :
38.ஓம் பரமாத்மனே நம :
39.ஓம் ஞானஸ்வரூபிணே நம :
40.ஓம் ஜகத பித்ரே நம :
41.ஓம் பக்தனாம் மாத்ரு தாத்ருபிதாமஹாய நம :
42.ஓம் பக்தாபயப்ரதாய நம :
43.ஓம் பக்தபாராதீனய நம :
44.ஓம் பக்தானுக்ரஹ காதராய நம :
45.ஓம் சரணாகதவத்ஸலாய நம :
46.ஓம் பக்தி சக்தி ப்ரதாய நம :
47.ஓம் ஞான வைராக்யதாய நம :
48.ஓம் ப்ரேமப்ரதா
49.ஓம் ஸம்சய ஹ்ருதய தௌர்பல்ய
பாபகர்ம வாஸனா சஷயகராய நம :
50.ஓம் ஹருதய க்ரந்திபேதகாய நம :
51.ஓம் கர்மத்வம்சினே நம :
52.ஓம் சுத்த ஸத்வஸ்திதாய நம :
53.ஓம் குணாதீத குணாத்மனே நம :
54.ஓம் அனந்த கல்யாண குணாய நம :
55.ஓம் அமித பராக்ரமாய நம :
56.ஓம் ஜயினே நம :
57.ஓம் துர்தர்ஷாசேஷாப்யாய நம :
58.ஓம் அபராஜிதாய நம :
59.ஓம் த்ரலோகேஷீ அஸ்கந்திதகதயே நம :
60.ஓம் அசக்யராஹிதாய நம :
61.ஓம் ஸர்வசக்தி மூர்த்தயே நம :
62.ஓம் ஸீ ரூபஸீந்தராய நம :
63.ஓம் ஸீலோசனாய நம :
64.ஓம் பஹீரூப விஸ்வ மூர்த்தயே நம :
65.ஓம் அரூபாவ்யக்தாய நம :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

66.ஓம் அசிந்த்யாய நம :
67.ஓம் ஸீசஷ்மாய நம :
68.ஓம் ஸர்வாந்தர்யாமினே நம :
69.ஓம் மனோவாக தீதாய நம :
70.ஓம் ப்ரேமமூர்த்தயே நம :
71.ஓம் ஸீலபதுர்லபாய நம :
72.ஓம் அஸஷாயாய ஸஹாயாய நம :
73.ஓம் அநாதநாத தீனபந்தவே நம :
74.ஓம் ஸர்வ பாரப்ருதே நம :
75.ஓம் அகர்மானேக கர்மஸீகர்மிணே நம :
76.ஓம் புண்யச்ரவண கீர்த்தனாய நம :
77.ஓம் தீர்த்தாய நம :
78.ஓம் வாஜீதேவாய நம :
79.ஓம் ஸதாம் கதயே நம :
80.ஓம் ஸத்பராயணாய நம :
81.ஓம் லோகநாதாய நம :
82.ஓம் பாவனானகாய நம :
83.ஓம் அம்ருதாம்சவே நம :
84.ஓம் பாஸ்கரப்ரபாய நம :
85.ஓம் ப்ருஷ்மசர்யதப: சர்யாதிஸீவ்ரதாய நம :
86.ஓம் சத்ய தர்ம பராயணாய நம :
87.ஓம் ஸித்தேச்வராய நம :
88.ஓம் ஸித்த ஸங்கல்பாய நம :
89.ஓம் யோகேச்வராய நம :
90.ஓம் பகவதே நம :
91.ஓம் பக்தவத்ஸலாப நம :
92.ஓம் ஸத்புருஷாய நம :
93.ஓம் புருஷோத்தமாய நம :
94.ஓம் ஸத்ய தத்வபோதகாய நம :
95.ஓம் காமாதி ஸர்வ அக்ஞானத்வம்ஸினே” நம :
96.ஓம் அபேதா நந்தானுபவப்ரதாய நம :
97.ஓம் ஸமஸர்வமதஸம்மதாய நம :
98.ஓம் தசஷிணாமூர்த்தயே நம :
99.ஓம் வேங்கடேசரமணாய நம :
100.ஓம் அத்புதானந்தசர்யாய நம :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

101. ஓம் ப்ரப்னார்த்திஹராய நம :
102. ஓம் ஸம்ஸாரஸர்வதுக்கசஷயகராய நம :
103. ஓம் ஸர்வித்ஸர்வதுக்கசஷயகராய நம :
104. ஓம் ஸர்வாந்தர்பஹிஸ்திதாய நம :
105. ஓம் ஸர்மங்களராய நம :
106. ஓம் ஸர்வாபீஷ்ப்ரதாய நம :
107. ஓம் ஸமரஸஸன்மார்கஸ்தாபனாய நம :
108. ஓம் ஸ்ரீ ஸமர்த்தஸத்குரு ஸாயிநாதாய நம :

## 16. ஸ்ரீ சாயிபாபா ஆரத்தி பாடல்

ஓம் ஜய் ஜகதீஷ் ஹரே
ஸ்வாமி ஜய் ஜகதீஷ் ஹரே
பக்த் ஜனோ கே ஸங்கட்
பக்த் ஜனோ கே ஸங்கட்
க்ஷண்மே தூர் கரே ஓம் ஜய் ஜய் ஜகதீஷ் ஹரே 1

ஜோதாவே பல் பாவே
துக் பின் ஸே மன்கா
ஸ்வாமி துக் பின் ஸே மன்கா
சுக ஸம்பதி கார்ஆ வே
சுக ஸம்பதி கார் ஆவே
கஷ்ட மிடே தன்கா ஓம் ஜய் ஜகதீஷ் ஹரே 2

மாத பிதா தும் மேரே
ஷரண் கஹீ கிஸ்கி
ஸ்வாமி ஷரண் கஹீகிஸ்கி
தும் பின் அவுர் ந தூஜா
தும் பின் அவுர் ந தூஜா
ஆஸ் கரு ஜிஸ்கீ ஓம் ஜய் ஜகதீஷ் ஹரே 3

தும் பூரண் பரமாத்மா
தும் அந்தார்யாமி
ஸ்வாமி தும் அந்தர்யாமி
பரப்பரம்ம பரமேஷ்வர்
பரப்ரம்ம பரமேஷ்வர்
தும் ஜக்கே ஸ்வாமி ஓம் ஜய் ஜகதீஷ் ஹரே 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும் கருணா கே ஸாகர்
தும் பாலன் கர்தா
ஸ்வாமி தும் பாலன் கர்தா
மை மூரக் கல் காமீ
மை மூரக் கல் காமீ
க்ரிபா கரு பர்தா ஓம் ஜய் ஜகதீஷ் ஹரே 5

தும் ஹோ ஏக் அகோசர்
ஸப் கே ப்ராண் பதி
ஸ்வாமி ஸப் கே ப்ராண்பதி
கிஸ் வித் மிலூதயா மை
கிஸ் வித் மிலூதயா மை
தும் கோ மை குமுடி ஓம் ஜய் ஜகதீஷ் ஹரே 6

தீன் பந்து துக் ஹர்தா
தும் டாகுர் மேரே
ஸ்வாமி தும் டாகுர் மேரே
அப்னே ஹாத் படா வூ
அப்னே ஹாத் படா வூ
த்வார் படா தேரெ ஓம் ஜய் ஜகதீஷ் ஹரே 7

விஷய் விகார் மிடாவூ
பாப் ஹரோ தேவா
ஸ்வாமி பாப் ஹரோ தேவா
ஷ்ரத்தா பக்தி படாவூ
ஷ்ரத்தா பக்தி படாவூ
சந்தன் கி ஸேவா ஓம் ஜய் ஜகதீஷ் ஹரே 8

பூர்ண ப்ரம் கீ ஆரத்தி
ஜோ கோயீ காவே
ஸ்வாமி ஜோ கோயீ காவே
கரத் ஷிவாநந்த் ஸ்வாமி
கரத் ஷிவாநந்த் ஸ்வாமி
சுக் சம்பதி ஆவே ஓம் ஜய் ஜகதீஷ் ஹரே 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாழக்கிழமை உன்னை பூஜித்தோமே
தேவா! உன் கிருபையால் நலம் அடைந்தோமே
ராம, கிருஷ்ண, ஹனுமான் ரூபத்திலே
அழகு தரிசனம் எமக்களிப்பாயே 10

## 17. ஸ்ரீ சாயிபாபாவிற்கு நிவேதனம்

ஓ! சாயிபாபா ஏற்றருள்வாயே - நான்
அன்புடன் அளித்திட்ட உணவினையே.
பாசமுடன் நல்ல இனிப்புகள் செய்தேனே.
பக்தியுடன் பல பண்டங்கள் சமைத்தேனே.
பால்கோவா, பாயாஸம், பொங்கல் நீ கேட்டாலே,
தருவிப்பேன் உனக்கு உணவு அளிக்கையிலே
கங்கை, யமுனை. காவிரியின் நீர் தருவேனே.
அறுசுவை உணவு, அன்னமும் அளிப்பேனே.
கொழுந்து வெற்றிலை, பாக்கு, கிராம்புடனே.
ஏலமும் சேர்த்து தாம்பூலம் அளிப்பேனே.
வியாழக்கிழமை சாயி பூசை செய்வேனே.
தினமும் சாயிநாதருக்குணவு அளிப்பேனே.
சாயியின் அருளால் ஆனந்தம் பெருகிடுமே.

## 18. ஸ்ரீ சாயிபாபா வின் ஆரத்தி

ஆரத்தி எடுப்போம் ஸ்ரீசாயி உமக்கே
ஆரத்தி எடுப்போம் வியாழக்கிழமையுமே
பரமானந்த சுகத்தினை அளிப்பாயே
தயையுடன் எமக்கருள் செய்வாயே
துக்க, சோக, சங்கடம் தீர்த்தருள்வாயே
வாழ்வில் ஆனந்தம் பொங்க அருள்வாயே
என் மனதில் உன்னை நினைத்ததுமே
அக்கணமே வந்து அநுபவம் தந்தாயே
உந்தன் திருஉதி நெற்றியில் இட்டதுமே
அனைத்து தொல்லைகள் தொலைந்தனவே
சாயி நாமமே தினமும் ஜபித்தாமோ
நொடியிலும் உம்மை யாம் பிரியோமே
வியாழக்கிழமை உன்னை பூஜித்தோமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவா! உன் கிருபையால் நலம் அடைந்தோமே
ராம, கிருஷ்ண, ஹனுமான் ரூபத்திலே
அழகு தரிசனம் எமக்களிப்பாயே

பல மத முறயில் பூஜித்துமே
பக்தர் குறை கேட்டருள் புரிவாயே
சாயியின் நாமம் வெற்றி நல்கிடுமே
தேவா! வெற்றியின் அர்த்தம் நாதானே
சாயிதாஸனின் ஆரத்தி பாடுபவனுமே
சர்வ சுகம், சாந்தி வளம் பெறுவானே.

(ஆரத்தி)

## 19. ஸ்ரீ சாயி நாம தியானம்

ஹரே ராம் ஹரே ராம் - ராம் ராம் ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண -
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே சாயி ஹரே சாயி - சாயி சாயி ஹரே ஹரே
ஹரே பாபா ஹரே சாயி பாபா - பாபா ஹரே ஹரே
ஹரே தத்த ஹரே தத்த - தத்த தத்த ஹரே ஹரே

## 20. ஸ்ரீ சாயி பிரார்த்தனை

குருவாய் உந்தனைத் தொழுதேன் சாயிநாதா
உன்னருளை எனக்குத் தருவாய் சாயிநாதா
என் வாழ்விற்கு வழிகாட்டுவாய் சாயிநாதா
இன்ப துன்பம் நிறைந்த வாழ்வின் ஒளியாவாய் சாயிநாதா

வியாழன் தோன்றும் விரதம் இருந்தேன் சாயிநாதா
உலகப்பற்றை விட்டொழிக்க அருள்வாய் சாயிநாதா
குருவாயூரப்பனை உன்னிடத்தில் கொண்டுள்ள சாயிநாதா

கோமதி அம்மனின் அருகை மகனே சாயிநாதா
உந்தன் சரித்திரம் படித்திட அருள்வாய் சாயிநாதா
உந்தன் பாதகமலம் சரண் அடைந்தோம் சாயி நாதா
எனக்கு விஜயம் அருள்வாய் சாயிநாதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. ஸ்ரீ சாயி நாதர் அஷ்டகம்

1. அம்பிகை பெற்ற ஐங்கரனை துதித்தெழுதும் அடியேனின் ஐயன் சாயிநாதனே! அத்ரி அநுசூயா ஈன்ற மும்மூர்த்தி சேர் தத்த அவதாரமே! வாசுகியால் கடையப்பெற்று அமுது பொங்கிய தலம் ஷீர்டியில் எழுந்தருளிய பரப்ரஹ்மமே, கற்பகத்தருவே! கலியுகத்தின் கண்கண்ட தெய்வமே ஸ்ரீ பாத வல்லபனே! நரஸிம்ஹ ஸரஸ்வதியே, அக்கல்கோட் ஸ்வாமி ஸமர்த்தனே! பக்தனின் இன்னல் போக்கும் அனாத ரட்சகனே, அல்லாவின் புதல்வனே, இடர் நீக்கி, துயர் துடைத்து நலம் நல்க விரைந்து வந்து அருள்வாய் புண்ய நகர் ஷீர்டி வாஸ சாயிநாதனே.

2. அனுதினமும் சாயிநாமமே பிரதானமென்று எனக்கு விதித்த கடமையும் மறந்து, உன்னையே நினைந்து உன் பாதமே பணிந்து பலவித பூஜைகள் செய்தேன். உன் திருக்கதை படித்தேன். திருநாமம் ஜபித்தேன். உன் சொற்படி அன்னதானமிட்டேன். பிறர் மனதை நோகடித்து அறியேன் இத்தனை செய்தும் இக்கணம் இன்னல் வந்திட யாம் செய்த பிழைதாம் யாதென உரைத்திடுவாய். பக்தி வேடம் பூண்டு போலி நாடகம் புரியும் அற்பனென்று என்னைப் புரிந்திட்டாயா? குழம்பித் தவிக்கும் எனக்கு விரைந்து வந்து அருள்வாய் புண்யநகர் ஷீர்டி வாஸசாயிநாதனே.

3. வசீகர அருளால் பக்தரை உன் பக்கம் காணச் செய்தாயே, கோடானு கோடி பக்தர் உன் பதம் பற்றியதால். அடியேனுக்கு இரங்கிட உமக்கு நேரமில்லையா? மனமில்லையா? நொடிப்பொழுதும் உன்னைப் பிரியேன். இமைப்பொழுதும் உன்னை விலகிடேன். என் பக்தியில் நீ கண்ட பிழைபறியேன் சாயி! முன்வினையோ! தீவினையோ? நானறியேன். தீவினையைத் தீக்கிரையாக்க உன் தயவொன்று போதுமே, கருணா சாகரா! தாயினும் மேலான தயை மனம் கொண்டவனே. சேய் அழுதால் தாங்குமோ உன் மனமே? உன் நாமமே பிதற்றும் எனக்கு விரைந்து வந்து அருள்வாய் புண்ய நகர் ஷீர்டி வாஸ சாயிநாதனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கொடும் விட நஞ்சு கொண்ட அரவம் தீண்டியும். ஷாமாவை காலனின் பிடியிலிருந்து காத்தாயே! சர்வேஸா! சேஷசாயி! என்னைக் காத்தருள ஏனிந்தத் தயக்கம்? கண்கள் நீர் சொரிந்து காய்ந்தும் போனதே. நாவும் சாயிநாமம் பாடியே உலர்ந்தும் போனதே. என் மேல் நீ கொண்ட கோபம் அறியேனே. உன் நினைவன்றி வேறு எதையும் நினைந்திடனே. நீயே அடைக்கலமென்று தஞ்சமும் அடைந்தேனே. என் பக்திக்கிரங்கி இக்கணமே என் கண்கள் முன்னே தோன்றி வேண்டிய வரமளித்திட விரைந்து வந்து அருள்வாய் புண்ய நகர் ஷீர்டி வாஸ சாயிநாதனே.

5. தூய மனதில் நான் உன்மேல் கொண்ட பக்தி சத்தியமே. உன் திருக்கதை கேட்டு சாயி பக்தனாகி, சாயி பித்தனாயும் ஆனேன். உன் பாதமலரில் பக்தியோடு விழுந்து கிடந்தேனே. நீ என்னைப் பாராமல் போனால் அது நியாயமில்லையே. என் துயர் நீ போக்காவிடில் உலகம் நம்மைக் கேலி பேசுமே, சாயி உன்னிடம் இரங்கவில்லை, உன் பக்தி ஒரு நாடகமே என்று என்னைத் தூற்றுமே. சாயி பக்தனுக்கா துயரம்? உலகம் உன்னைப் பழித்தால் என் மனம் தாங்காதே. பழிச்சொல்லிலிருந்து காப்பாற்றி பக்தனையருள விரைந்து வந்து அருள்வாய் புண்யநகர் ஷீர்டி வாஸ சாயிநாதனே.

6. ஏதுமறியோ மூடனாய், அறிவிலியாய், இறைவனை அறியாமல் திரிந்த என்னை உன் பாதம் காணச் செய்து பக்தனாக்கினாய். எம்மதமும் சம்மதம் என்ற சர்வதத்வ போதகனே. இக்கணம் எனக்கு வந்த துயர் நீ போக்காவிடில் நாஸ்திகம் ஆனந்த எக்காளமிடுமே. தெய்வம் பொய்யானதே என்று எள்ளி நகையாடுமே. பக்தி நம்பிக்கையை ஏசிடுமே. நீ பொய்யில்லை, நீ சத்தியமென்று நான் அறிவேன். உண்மையாய் உலகமுழுதில் வியாபிக்கின்றாய் என்று பெருமையுடன் பறைசாற்றும் எனக்கு விரைந்து வந்து அருள்வாய் புண்ய நகர் ஷீர்டி வாஸ் சாயிநாதனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. அன்கி ஹோத்ரியாய் துனியை எரிய விட்டு, அரும் உதியால் பக்தனின் பிணி, துயர் போக்கும் துவாரகாமாயி வாழ் ஆனந்த சாயி! பஞ்சபூதமும் உந்தன் கையசைவிலே, விரல் சொடுகில் விதியையே மாற்றும் விஸ்வநாதனே, பிரம்ம ஸ்வரூபனே! உம்மையன்றி யாரையும் அறியாத என் வேதனையை போக்கிடுவாய். துன்பக்கடலில் தத்தளிக்கும் எமக்கு தோணியாய் வந்திடுவாய். என் விண்ணப்பங்களை விருப்பமாய்க் கேட்டு என் இன்னல் களைந்து இன்பம் தருவாய். ஈடில்லா செல்வமும், வெற்றியும், பிணியிலா வாழ்வும், இறையருளும், நற்கதியும் பெற்றிட விரைந்து வந்து அருள்வாய் புண்ய நகர் ஷீர்டி வாஸ சாயிநாதனே.

8. யாமிருக்க பயமேன்! நம்பிக்கை, பொறுமை மிக்க பக்தி கொள் என்றாய். எத்தனைகாலம் பொறுமை காப்பேன். பொறுமைக்கொரு எல்லைஉண்டே, நான் உயர் கடவுள் இல்லையே. ஜனன மரணம் எய்தும் அற்ப மானிடப் பிறவியே. காலம் கடந்து விட்டதே. என்னையும் தாண்டி பலர் முன் சென்று விட்டனரே. கவலையில் நெஞ்சும் கனக்கிறதே. தோல்வியில் துவண்டு, வேதனையில் மாண்டு தூண்டிலிட்ட புழுபோல் துடிதுடிக்கும் பக்தனுக்கிரங்கி வேண்டிய பதினாறு செல்வமிக்க வளமான வாழ்வும், சீரும் சிறப்பும், ஆரோக்கியம் ஆயுளும், புகழ் தரும் வெற்றியும், தனதானம் அனைத்தும் இனிதே தந்திட விரைந்து வந்து அருள்வாய் புண்யநகர் ஷீர்டி வாஸ சாயிநாதனே.

**ஸ்ரீ சாயி நாதருக்கு அர்ப்பணம்.**

## 22. ஸ்ரீ சாயி நூற்றியெட்டு குரு ஓம்

| | |
|---|---|
| ஓம் ஸ்ரீ சாயி கணேஷாய | நம: |
| ஓம் சத்குரு சாயிநாதாய | நம: |
| ஓம் ஸ்ரீ ஜகத்குரு சாயிநாதாய | நம: |
| ஓம் பரமகுரு சாயிநாதாய | நம: |
| ஓம் தேவ குரு சாயிநாதாய | நம: |
| ஓம் சாயி சிவசக்த்யை | நம: |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சாயி சர்வ சக்திமானாய நம:
ஓம் சாயி சர்வ வ்யாபங்காய நம:
ஓம் சாயி சர்வ ஆத்மாய நம:
ஓம் சாயி அகல நிரஞ்சனாய நம: (10)
ஓம் சாயி சர்வ சாட்சியாய நம:
ஓம் சாயி சர்வ அந்தர்யாமியாய நம:
ஓம் சாயி பரிபூரஜாத நம:
ஓம் சாயி ஆதிசக்தியை நம:
ஓம் சாயி அனாதி சக்த்யை நம:
ஓம் சாயி ராமாய நம:
ஓம் சாயி த்ரிலோகிநாதாய நம:
ஓம் சாயி த்ரைகால தர்ஷியாய நம:
ஓம் சாயி கோவிந்தாய நம:
ஓம் சாயி சச்சிதானந்த ஸ்வரூபாய நம: (20)
ஓம் சாயி பக்த ரசஷ்காய நம:
ஓம் சாயி பரமானந்த ஸ்வரூபாய நம:
ஓம் சாயி மஹா துர்காய நம:
ஓம் சாயி ஆகர்ஷண சக்தியாய நம:
ஓம் சாயி அஞ்ஞான விநாசகாய நம:
ஓம் சாயி யோகீச்வராய நம:
ஓம் சாயி புருஷோத்தம புருஷாய நம:
ஓம் சாயி சங்கராய நம:
ஓம் சாயி சுகஸ்வரூபாய நம:
ஓம் சாயி கல்யாண ஸ்வரூபாய நம: (30)
ஓம் சாயி ஜக ஆதாராய நம:
ஓம் சாயி ரகுநந்தனாய நம:
ஓம் சாயி தேவரசஷகாய நம:
ஓம் சாயி அரசுரஸம்ஹாரியாய நம:
ஓம் சாயி கர்மபலதாதாய நம:
ஓம் சாயி தத்தாத்ரேய நம:
ஓம் சாயி கர்த்தா புருஷாய நம:
ஓம் சாயி தீனபந்துவாய நம:
ஓம் சாயி பகத் பயஹாரியாய நம:
ஓம் சாயி துக்க நிவாரணாய நம: (40)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சாயி அகால புருஷாய நம:
ஓம் சாயி ஆதிநாராயணாய நம:
ஓம் சாயி லீலாதாரியாய நம:
ஓம் சாயி ஜனஹித் காரியாய நம:
ஓம் சாயி சிவசம்புவாய நம:
ஓம் சாயி ஆபத் ஹரணாய நம:
ஓம் சாயி சரணாக்த வத்ஸலாய நம:
ஓம் சாயி மாதவாய நம:
ஓம் சாயி ரோக ஹாராய நம:
ஓம் சாயி சாயி ஜகத் காரணாய நம: (50)
ஓம் சாயி சத்கதி தாதாய நம:
ஓம் சாயி மாகாளிகாயை நம:
ஓம் சாயி கருணாசிந்துவாய நம:
ஓம் சாயி சர்வேஸ்வராய நம:
ஓம் சாயி ஜகதீஸ்வராய நம:
ஓம் சாயி அகால சக்தியை நம:
ஓம் சாயி பதீத பாவனாய நம:
ஓம் சாயி விஸ்வநாதாய நம:
ஓம் சாயி வேத ஸ்வரூபாய நம:
ஓம் சாயி சுக தாதாய நம: (60)
ஓம் சாயி ஹரிநாராயணாய நம:
ஓம் சாயி சத்ய ஸ்வரூபாய நம:
ஓம் சாயி சர்வ ஸாமர்ணாய நம:
ஓம் சாயி ஜோதி ஸ்வரூபாய நம:
ஓம் சாயி மஹாலஷ்ம்யை நம:
ஓம் சாயி ஹரிகோவிந்தாய நம: (70)
ஓம் சாயி சோஹம் தேவாய நம:
ஓம் சாயி ஓம்கார ஸ்வரூபாய நம:
ஓம் சாயி மஹாசரஸ்வத்யை நம:
ஓம் சாயி ஹரிவிட்டலாய நம:
ஓம் சாயி வெங்கடேஷ்வராய நம:
ஓம் சாயி மாயா விநாசகாய நம:
ஓம் சாயி மோஹ விநாசகாய நம:
ஓம் சாயி விபத்திப ஞ்சநாத நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சாயி பக்தி தாதாய நம:
ஓம் சாயி முக்தி தாதாய நம:
ஓம் சாயி ஞான தாதாய நம:
ஓம் சாயி கோபிவல்லபாய நம:
ஓம் சாயி பவதாரகாய நம:
ஓம் சாயி சர்வப்ரியாய நம: (80)
ஓம் சாயி அபராத ஹர்தாத நம:
ஓம் சாயி பண்டரீ நாராயணாய நம:
ஓம் சாயி கிருபா சாகராய நம:
ஓம் சாயி மங்கலஹாரி தேவாய நம:
ஓம் சாயி அமங்கலகாரி தேவாய நம:
ஓம் சாயி அம்ருத சிந்துவாய நம:
ஓம் சாயி சாந்தி தாதாய நம:
ஓம் சாயி சந்திரமௌலீஸ்வராய நம:
ஓம் சாயி ஜகத்ரூபாய நம:
ஓம் சாயி ஆத்ம ஜோதிபாய நம: (90)
ஓம் சாயி லசஷ்மிநாராயணாய நம:
ஓம் சாயி அபேதசக்தியாய நம:
ஓம் சாயி விஷ்வ ஆத்மாய நம:
ஓம் சாயி பரமாத்மாய நம:
ஓம் சாயி பக்தவத்ஸலாய நம:
ஓம் சாயி அக்னி ரூபாய நம:
ஓம் சாயி காயத்ரியை நம:
ஓம் சாயி மஹா அம்பிகாயை நம:
ஓம் சாயி தர்மரசஷ்காய நம:
ஓம் சாயி சித்தி தாதாய நம:(100)
ஓம் சாயி ரித்தி தாதாய நம:
ஓம் சாயி ஊர்ப்ரகாய நம:
ஓம் சாயி சாதுரசஷ்காய நம:
ஓம் சாயி சிந்தாநாசாகாய நம:
ஓம் சாயி ஆனந்தமூர்த்தாய நம:
ஓம் சாயி பாக்ய விதாதாய நம:
ஓம் சாயி ஹரிஹராய நம:
ஓம் சாயி பரப்ரஷ்மாய நம:(108)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23. ஸ்ரீ சாயிபாபாவின் அமுத மொழிகள்

**1.** நான் எப்போதும் உங்களுடனேயே இருக்கின்றேன். உங்கள் இதயமே என் இருப்பிடம்.

**2.** எவன் என்னை மிகவும் விரும்புகிறானோ, அவன் என்னை எப்போதும் காண்கிறான். நான் அவனது அருகில் இருக்கிறேன்.

**3.** என்னிடம் வருபவன், கடலுடன் ஆறு கலப்பது போல் என்னுடன் ஒன்றறக் கலந்து விடுகிறான்.

**4.** என் மீது உங்கள் சுமைகளை வையுங்கள். நான் நிச்சயமாக அதைத் தாங்கி, உங்களுக்கு அபயம் தருவேன்.

**5.** உடலால் உலகத்துக் கடமைகளைச் செய்யுங்கள். மனதை கடவுளுக்கு அளித்து விடுங்கள்.

**6.** கடவுள் கருணையானவர். நல்லவர்களுக்குத் தீங்கு வருவதை அவர் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்.

**7.** முதலில் பசியோடு இருப்பவர்களுக்கு உணவு கொடுத்து பின்பு நீ உண்ணுவாயாக. அதுவே சிறந்த தருமம்.

**8.** ஒருவருக்கொருவர் அன்பாக இருந்தும் சேவை செய்தும் நாம் மகிழ்வுடன் இருப்போம். அப்போது உலகமும் மகிழ்ச்சியாக இருக்கும்.

**9.** பாவங்கள் நீங்கப் பெற்றவர்களே அதிஷ்டம் பெற்றவர்கள். பாவங்கள் நீங்கப் பெற்றவர்களுக்கு சாயியை வழிபடும் போது நிச்சயம் கிட்டும்.

**10.** எனக்கு எட்டுவிதமான அல்லது பதினாறு விதமான உபசாரங்கள் செய்யவேண்டிய அவசியமில்லை. தூய்மையான பரிபூரண பக்தி உள்ள இடத்தில் நிச்சயம் நான் இருப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. அகங்காரம் மிக்கவனுக்கு குருவின் போதனைகள் கூடப் பயனற்றவையே. அதனால் முதலில் அகங்காரத்தை ஒழியுங்கள்.

12. ஷீர்டியில் உள்ள துவாரகாமாயீயை அடைந்தவர்கள், அதீதமான மகிழ்ச்சி அடைவார்கள்.

13. மனிதர் எவ்விதம் என்னை நம்புகிறார்களோ, அவ்விதமே நான் அவர்களை ஏற்றுக்கொள்கிறேன். அதனால் நம்பிக்கையே அடித்தளம்.

14. கடவுள் எல்லா ஜீவராசிகளுக்குள்ளும் வசிக்கிறார். அவரே இவ்வுலகின் மிகப்பெரிய பொம்மலாட்டக்காரராகவும் திகழ்கிறார்.

15. பேராசையும் கடவுளும் எதிரெதிர் துருவங்கள். எங்கே பேராசை நிலவுகிறதோ, அங்கே கடவுள் இருப்பதில்லை. பேராசையை ஒழியுங்கள்.

16. பிறர் அமர்வதற்கு உங்கள் வீட்டுத் திண்ணையை அளித்தால். ஸ்ரீஹரி மகிழ்கிறார்.

17. உங்கள் பெயரையும், வடிவத்தையும் நீக்கி விட்டால். உள்ளே உணர்வு நிலை காணப்படும். இந்த உணர்வுநிலை உங்களிடத்தும், அனைத்து உயிர்களிடத்தும் நிலை பெற்றுள்ளது. அது 'நானே' யாகும். அதுவே ஆத்மா. இதைப் புரிந்துகொண்டு உங்களிடத்தும், எல்லா உயிர்களிடத்தும் என்னைக் காண முயலுங்கள். இந்தப் பயிற்சியின் மூலம் என்னுடன் ஒன்றாகும் நிலையை அடைய முடியும்.

18. சாது என்பவன் யார்? உயர்ந்த நிலையில்லுள்ளவன் முதற்கொண்டு புழுக்கள் போன்ற கடைநிலை உயிர்களிடத்தில்கூட உயர்வு-தாழ்வு பார்க்காமல் இருப்பவனே உண்மையான சாது. அவன் எப்போதும் இன்பம், துன்பம், நண்பன், பகைவன், போகம், ரோகம் இவைகளை சமமான மனநிலையில் பார்க்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**19.** மனிதனின் உண்மையான லட்சியம் மோட்சமே ஆகும். மற்ற அனைத்துமே பயனற்றவையே. மோட்சம் என்றால் சொர்க்கம் அல்ல: வேறு உலகங்களும் அல்ல அது சூட்சுமமானது. அது கண்ணுக்குத் தென்படாத பிரபஞ்சத்தின் உற்பத்தி மையம். அதுவே சுத்த சைதன்யமும் அழிவற்ற நிலையும் ஆகும்.

**20.** சிறந்த மார்க்கம் என்பது பிரம்மத்தைக் கண்டறிவதே என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். எனவே இன்ப துன்பங்களைப் பற்றி கவலை கொள்ளாமல், மோட்சத்தை அடைய விரும்புங்கள். அதுவே உண்மையான ஞானம் ஆகும்.

**21.** தத்துவங்களைக் கற்று விவாதங்களில் பிறரை ஏளனம் செய்து தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்வது விவேகமாகாது. அவர்கள் விவேகிகளும் அல்லர். அவர்களால் பிரம்ம ஞானத்தை அடைய முடியாது. இதயத்தைத் தூய்மையாக வைத்திருப்பதே ஞானத்தை அடையும் வழி.

**22.** வைராக்கியம் என்பது என்ன? இந்த உலகச் செல்வங்களையோ மறு உலக செல்வங்களையோ, வேறு எந்த ஒரு சிறந்த பொருளையும் சிந்திக்காது இருப்பதே வைராக்கியம்.

**23.** பிறருக்கு தர்மம் செய்யும்போது கோபம் கொள்ளாதீர்கள்: கடுமையான வார்த்தைகளைப் பேசாதீர்கள். நாம் கொடுக்கின்ற தர்மம் போதாது என்று ஒருவேளை அவர்கள் மீண்டும் கேட்டால், சாந்தமான வார்த்தைகளைக் கூறி அவர்களை அனுப்பி வையுங்கள். அதுவே சிறந்த தர்மம் ஆகும்.

**24.** ஒருவரது பாதங்களைப் பிடிப்பது மட்டும் சேவை அல்ல. தனது உடல், உள்ளம், பொருள் அனைத்தையும் அர்ப்பணிப்பதே உண்மையான சேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**25.** குரு சேவை என்ன? குருவிடம் நீ அடைக்கலம் புகுந்துவிட்டால், உன்னுடைய தேகம்கூட குருவுக்குச் சொந்தமாகி விடுகிறது. அதன் பிறகு குருவுக்குச் சொந்தமான தேகத்தைக் குருவின் சேவையில் ஈடுபட வைக்கிறேன் என்ற எண்ணத்துடன் செயல்படுவதே உண்மையான குரு சேவை. கடவுள் சேவையும் அதுவே.

**26.** பூர்வ கர்மாவின் பலன்களாலேயே இவ்வுலகில் குழந்தை பிறப்பதும், அதன் உறவினர் இறப்பதும் ஆகும். அதை படைப்புக் கடவுளான பிரம்மானாலும் மாற்ற முடியாது. அதிகாலையில் சூரியன் உதயமாவதைப்போலவும். சந்திரன் மறைவதைப் போலவும் ஒரு உயிர் தோன்றி மற்றொரு உயிர் மறைகிறது.

**27.** சம்சாரம் என்பது காமம், குரோதம் ஆகியவற்றின் செயலே ஆகும். எங்கு ஓளி ஒளிந்தாலும் சம்சாரத்தை விட்டுத் தப்பிக்க முடியாது.

**28.** பூர்வ ஜென்மத்தில் நீ செய்த நல்வினை, தீவினைகளின் பலனை இப்பிறவியில் அனுபவித்தே ஆக வேண்டும். கர்மங்களின் பலனாக உருவானதே இப்பிறவியின் உடல். இதுவே தேக பிராப்தம் என்றழைக்கப்படுகிறது. செல்வந்தன் வீட்டு நாய் மெத்தை விரிப்பில் படுத்திருக்கும். வறியவன் வீட்டு நாய் குப்பையில் படுத்திருக்கும். இதுதான் தேகப் பிராப்தம்.

**29.** எது இன்பமாகத் தெரிகின்றதோ உண்மையில் அது இன்பமாகாது. துன்பமும் அதுபோலத்தான். உலக வாழ்க்கையில் ஈடுபடுகிற மனிதன் எதை இன்பம் என்று நினைக்கிறானோ அது உண்மையான இன்பமாக இருக்க இயலாது. அது நிலையானதும் அல்ல, இன்பம், துன்பம் இரண்டுமே மாயைதான்.

**30.** பசி தோன்றிய நேரத்தில் அறுசுவையான உணவு, கூழ்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொட்டி எதை உண்டாலும் முடிவு ஒன்றுதான். வயிறு நிறைந்து பசி தீருவதே அது.

**31.** கந்தைத் துணியை உடுத்திக்கொண்டு வலம் வருகிறான் ஒருவன். பட்டுத் துணிகளைக் கட்டிக்கொண்டு ஆடம்பர அலங்காரத்துடன் வலம் வருகிறான் மற்றொருவன். இரண்டின் பலனும் உடலைப் போர்த்திக் கொள்வதேயன்றி வேறு என்னவாக இருக்க முடியும்.

**32.** இன்பமும், துன்பமும் அவரவர் மனநிலையைப்பொறுத்தது. இது மாயை மற்றும் பூர்வ கர்மாவின் பலனே ஆகும். மாயையின் தோற்றத்தாலேயே காமம், குரோதம், லோபம் மோகம், மதம், மாச்சரியம் என்ற ஆறுவகை விரோதிகள் உருவாகிறார்கள்.

**33.** காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்ற ஆறு வகை விரோதிகளை நம் வைராக்கியத்தால் வெல்ல முடியும். வெல்லவும் வேண்டும். அவ்வாறு வென்றுவிட்டால் மனதில் ஆசை தோன்றாது. அவ்விரோதிகள் இருக்கும் வரை நீ அடிமையே. அவற்றை நீ அடக்கி, விவேகத்தைப் பெற்றுவிட்டால் மாயை என்ற இருள் அகன்றுவிடும். அதன் பிறகு சுக துக்கம் உன்னை ஒருபோதும் பாதிப்பதில்லை.

**34.** ஆழ்கடலில் தத்தளிப்பவன் ஒவ்வொரு அலைகளையும் கடந்து கரை சேர்வது போலவே, மேற்கூறிய ஆறுவகை அலைகளையும் கடந்த பின்பே நீ வாழ்க்கை என்னும் கடலைக் கடந்து கரைசேர முடியும்.

**35.** ஒவ்வொருவரும் அவரவர்க்குக் கிடைத்திருக்கும் தேகப் பிராப்தத்தைக் கொண்டு திருப்தி அடைவதே விவேகம், தன்னிடம் இருப்பதைக் கொண்டு திருப்தி அடைந்தவனாய், விருப்பு, வெறுப்பு அற்றவனாய், துக்கத்தையும், சுகத்தையும் சமமாக பாவிக்கும் எண்ணம் கொண்டிருப்பதே சிறந்த இல்வாழ்க்கை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**36.** ஒரு செடியிலோ, மரத்திலோ பழங்கள் அதிகம் பழுத்து விட்டால், பிறர் பறிப்பதற்கு ஏதுவாக அவை வளைந்து கொடுக்கின்றன. அதுபோல உன்னிடம் செல்வம் அதிகம் இருந்தால் இல்லாதவர்க்கு நிச்சயம் நீ தானம் செய்ய வேண்டும்.

**37.** பித்தமும், செல்வமும் ஒன்றுதான், உடல் ஆரோக்கி யத்திற்குப் பித்தமும் அவசியம்தான். அது போலவே செல்வமும், உடல் உள்ளவரை செல்வமும் தேவை. ஆனால் செல்வத்திற்கு அமையாகி லோபியாக மாறிவிடக்கூடாது தம்மம் சிந்தனை உள்ளவனாக இருக்கும் அதேநேரத்தில் வீண் செலவும் செய்யாமலிரு!

**38.** இவ்வுலகத்தின் நிகழ்வுகளைக் கவனித்துக் கொண்டு மகிழ்ச்சியாக இரு! ஆனால் ஒருபோதும் கடவுளை மறந்துவிடாதே. இந்த உலக வாழ்க்கை என்னுடையதல்ல, கடவுளுடையது என்ற எண்ணத்துடன் ஏழைகளிடமும், துயரப்படுபவர்களிடமும் எப்போதும் கருணை காட்டு.

**39.** சம்சாரத்திலே மூழ்கிப்போனவர்கள், இதயத்தில் தூய்மை இல்லாதவர்கள், சாஸ்திரங்களின் மீதும், சாதுக்களின் மீதும் நம்பிக்கை இல்லாதவர்கள் கடவுளை எப்படி அடைய முடியும்? அவர்கள் நரகத்தை நோக்கியே நகர்கிறார்கள்.

**40.** உலக வாழ்க்கை என்னும் சம்சாரத்தில் கட்டுண்ட நிலையை வெறுப்பவனும், விவேகத்தைக் கடைப்பிடித்து, ஆழமான பக்தியை வளர்த்துக் கொள்பவனும், ஜெபம், தியானம் இவைகளால் மனத்தை ஒருநிலைப்படுத்துபவனும், சாதுக்களுடன் தொடர்பு வைத்துக் கொள்பவனும் கடவுளின் நிலையை அடைகிறான். அவன், இந்த உடலானது தன்னுடையது அல்ல என்று உணர்ந்து பற்றுதல் இன்றி வாழ்கிறான். அவனுக்கு நானே பிரம்மம் என்ற உண்மை புரிந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. கடவுள் எங்கும் இருக்கிறார். அவர் இல்லாத இடமே இல்லை. அசைகின்ற, அசையாத எல்லாப்பொருள்களிலுமே கடவுள் இருக்கின்றார். சாதுக்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிலையில் கடவுளைக் கண்டு உணர்ந்துள்ளார்கள்.

42. ஏதோவொரு மாயையானது நாம் கடவுகளைக் காண்பதைத் தடுக்கின்றது. அந்த மாயையின் சக்தியை உணர்ந்து கொள். இந்த பிரபஞ்சத்தில் நான், நீ மட்டுமின்றி எவை எவை உண்டோ, அவை அனைத்துமே கடவுளின் அம்சமே.

43. இந்த பிரபஞ்சத்தின் ஒவ்வொரு இடத்திலும் ஈசன் உறைந்துள்ளான் என்பதை நாம் நினைவில் கொண்டாலேயே, நம்முள் அன்பு தானாக ஊற்றெடுக்கத் தொடங்கும். அன்பு நம்மிடம் பெருகும்போது எல்லாமே நமக்குக் கிடைத்துவிடும்.

44. இறைவனைக் காண மனமே ஆதாரம். ஆனால் அந்த மனம் எளிதில் அடங்காதது. முரட்டுத்தனமானது, அதை எப்படியேனும் அடக்க வேண்டும்.

44. மனிதனும் ஈயும் ஒன்றுபோலவே காணப்படுகிறார்கள். ஈயானது நல்லது-கெட்டது எல்லாவற்றிலும் போய் அமரும். ஆனால் தீயைக் கண்டால் பறந்துவிடும். அதுபோலவே மனிதன் தன்னிடம் உள்ள எல்லா ஆசைகளிலும் மூழ்குகிறான். ஆனால் தெய்வீகத்தைக் காணும் போதே வேறுபக்கம் திரும்பிவிடுகிறான்.

46. தறிகெட்டு ஓடும் மனம் இறைவனிடம் ஒன்று படாது. ஆத லால் பிறவியும், சம்சாரமும் தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

47. உருவ வழிபாட்டைப் புறக்கணிக்காதே! முதலில் கடவுளை உருவங்களில் வழிபடுவதனால் மனம் ஒருநிலைப்படும். ஒரு உருவச் சிலையை பக்தியுடன் பூஜை செய்யும்போது உன் மனத்தில் மகிழ்ச்சி ஊற்றெடுப்பதை நீயே உணர்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**48.** இரண்டாம் நிலையில் கடவுளைப் பற்றிய கதைகளைப்படி, தியானம், புராணம், சாஸ்திரம் போன்றவற்றைக் கற்றுக்கொள். வேதம் கூறுகின்ற நல்லொழுக்கத்தைக் கடைப்பிடி ஆத்ம வித்தைக்கும் எல்லா ஞானத்திற்கும் அதுவே முதற்படி. அதில் தேர்ந்துவிட்டால் வெற்றி உண்டாகும். ஹரியை (கடவுள்) நாம் வசப்படுத்த முடியும். அப்போது நீ கடவுளை மனம் குளிரக் காண முடியும்.

**49.** நாள்தோறும் சித்தர்கள், சாதுக்கள் ஆகியோரை தரிசனம் செய், தூய்மையான வாழ்க்கை நடத்து. மரணம் வரும்போது எந்த ஆசையும் மனதில் இல்லாமல் பார்த்துக்கொள். மனம் முழுவதையும் தெய்வத்தின் மீது செலுத்து. மனமானது முழுமையாக ஈசனிடம் செலுத்தப்பட்டால் முக்தி கிடைப்பது நிச்சயம்.

**50.** விவேகம் என்பது என்ன? உண்மை எது? உண்மையற்றது எது? என்பவற்றைக் கண்டறிவதே விவேகம் ஆகும். ஸ்ரீ ஹரியைப் பற்றி அறியாமல் பண்டரிபுரம் போய்வருவதில் என்ன அர்த்தம் உண்டு? ஸ்ரீ ஹரியைப் பற்றி அறியாமல் அங்கு சென்று வருவது பிறரது மதிப்பைப் பெற செய்யப்படுவதேயன்றி பக்தியோடு செய்யப்படுவது அல்ல.

**51.** இறைவனை ஒன்பது வகைகளில் வழிபடலாம். கடவுளின் லீலைகள்-அவதார புருஷர்கள்-சாதுக்கள் ஆகியவற்றைப் பற்றிய கதைகளையோ, புராணங்களையோ கேட்டறிவது முதல் வகையாகும்.

**52.** இறைவனின் திருநாமத்தை உச்சரித்துக் கொண்டே இருப்பது இரண்டாம் வகை. இறைவனின் திருநாமத்தை எண்ணி தியானம் செய்வது மூன்றாம் வகை.

**53.** இறைவனின் பாதங்களுக்குச் சேவை செய்தல் நான்காம் வகை. அர்ச்சனை செய்து பூஜிப்பது ஐந்தாம் வகை கைகூப்பித் தொழுதல் ஆறாம் வகை இறைவனுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைத்தொண்டர் மார்க்கும் சேவகனாகச் சேவை செய்வது ஏழாம் வகை.

**54.** இறைவனோடு தோழமை பாராட்டுவது எட்டாம் வகை ஆத்மாவை ஈசனிடம் அர்ப்பணிப்பது ஒன்பதாம் வகையாகும்.

**55.** ஐம்புலன்களைக் (கண், காது, மூக்கு, வாய், உடல்) கட்டுப்படுத்துவது: பிறகு ஆறாவது புலனான மனதைக் கட்டுப்படுத்தும் பூர்வ ஜென்ம பாவபுண்ணியங்களால் இப்பிறவியில் உண்டாகும் பலன்களை சற்றும் அலட்சியம் செய்யாமல் சகித்துக் கொள்வது: செல்வம், பெண்கள், மக்கள், நண்பர் யாவருமே உண்மையல்ல என்பதைப் புரிந்து மாயையிலிருந்து விடுபடுவது: பரத்தின் மீது அசையாத நம்பிக்கை கொள்வது: சுகம்-துக்கம் இரண்டையும் சமமாக பாவித்து திடமுடன் இருப்பது-இவையே கடவுளைக் காணும் வழியாகும்.

**56.** புண்ணியங்களிலெல்லாம் சிறந்த புண்ணியம் பிறர் இன்பம் கண்டு தான் இன்புறுவதே பிறர் துன்பப்படுவதைக் கண்டு தான் இன்புறுவதைப் போன்ற பாவம் வேறு இல்லை. ஒருபோதும் அதுபோல நடந்து கொள்ளாதீர்கள்.

**57.** தனது குழந்தை படும் துன்பத்தைக் கண்டு தாயானவள் எவ்வாறு தவிப்பாளோ, அதுபோலவே பராத்பரனான இறைவனும் தனது மக்களின் துயரத்தில் தவிக்கிறான். பகவானை மகிழ்ச்சியடையச் செய்ய ஒரே வழி நோயாலும், வறுமையாலும் துன்புறுவோர்களுக்கு உதவி செய்வதே.

**58.** பிறர்க்குத் தீங்கு செய்யாதவர்க்கே பாபா வரம் அருள்கிறேன். உண்மையில் வறுமையில் தவிப்பவர்களுக்கே செல்வத்தையும் தருகிறேன்.

**59.** கடவுளைக் காண வேண்டும் என்று பலருக்கும்தான் ஆசை இருக்கின்றது. கடவுளைக் காண வேண்டும் என்று ஆசைப்படுபவர் அனைவருக்கும் அது கிட்டி விடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கான தகுதி உடையவர்க்கே அது கிடைக்கும். கடவுளைக் காண விரும்புபவர், தன் வாழ்க்கையில் அதற்கான தகுதியுடன் வாழ வேண்டும்.

**60.** உண்மையான சீடன் என்பவன் யார்? அடிக்கடி குருவைத் தரிசிப்பவனும், உடலால் நெருங்கி இருப்பவனும், உண்மையான சீடனாகவோ, பக்தனாகவோமாறிவிட முடியாது. தன் அகங்காரம் முழுவதையும் துறந்து குருவிடம் தன்னை முழுமையாக அர்ப்பணிப்பவனே உண்மையான பக்தனாகவும், சீடனாகவும் விளங்குவான்.

**61.** இறைவனின் கீர்த்தனையை முழுமையான மன ஒருமைப் பாடுடன் பாராயணம் செய்யும்போது அவர்க்கு நிச்சயம் சாட்சாத்காரம் கிடைக்கும்.

**62.** இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும், அவர்கள் கர்ம ப்படி உரிய காலத்தில் மரணம் உண்டு, இதுவே உண்மை.

**63.** இவ்வுலகில் பிறந்த மனிதர் எல்லோரும் சம்சார பந்தத்தில் கட்டுண்டவராகவே இருக்கின்றார்கள். அந்த பந்தம் இருந்துதான் ஆகவேண்டும் என்பதே நியமியும்கூட.

**64.** பிறர் என்னை வணங்குவதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அவர்களின் அன்பை ஏற்றுக்கொள்கிறேன். என் பக்தர்கள் துன்பம் அடையக்கூடாது என்று நினைக்கிறேன். இது கூட ஒருவகையில் சம்சார பந்தமே ஆகும்.

**65.** ஒருவனிடம் எவ்வளவு செல்வம் இருந்தாலும் அவனுக்கும் பசியும் தாகமும் உண்டு. அதுபோல எவ்வளவு கற்ற மேதையானாலும் அவனுக்கும் கர்ம பலன்கள் உண்டு.

**66.** மனிதரிடையே ஏற்றத்தாழ்வு இருப்பதாக நீ கருதினால் அது பெரிய தவறே. ஒவ்வொரு உயிர்களிடத்திலும் அதனதன் கர்மாவைப் பொறுத்தே வேறுபாடு உண்டாகிறது என்பதை அறிந்து கொள்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

67. செல்வம் படைத்தவன் பொன் ஆபரணம் வாங்கினால். அதைக் காணும் ஏழை ஒருவன் பொறாமைப்படுகிறான். தானும் அதைப்போல ஒன்றைப் பெறவேண்டும் என்று ஆசை கொள்கிறான். இதுவே லோபம், அதுவே நாம் விலக்க வேண்டிய மாயை.

68. பிறர்மீது குறை கூறிக்கொண்டு, குதர்க்கம் செய்கிறவர்கள் அனைவரும் என் உள்ளத்தைத் துளைத்து காயப்படுத்துகிற வர்கள் தான். எல்லா துன்பங்களையும் பொறுமையும் தாங்கிக் கொண்டு என்னைச் சரண் அடைகிறவன் என்னை மிகமிக அதிகமாக மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறான்.

69. நம் மனத்தை எப்போதும் சாந்தமாய் வைத்துக்கொண்டு, ஒரே நிலையில் இருந்து நாம் ஊழியம் செய்ய வேண்டும். அப்போது நம்முடைய எண்ணம் வெற்றி அடையும். உலகில் வல்லவன் ஒருவன் வாழ்வதும். அவனுக்குக் கீழே சிலர் வாழ்வதும் இயற்கையின்விதி, நமது ஆத்மா சாந்தநிலையில் இருக்க வேண்டும் என்பதே அவசியம் ஆகும்.

70. உன் குருவினிடத்தில் அசையா நம்பிக்கை வை உன் குருவையே எண்ணத்திலும், இலட்சியத்திலும் வைத்துக்கொள் கண்டிப்பாக ஆன்மிக வாழ்வின் இலட்சியமாகி பரமாத்மம் உனக்குக் கிடைக்கும். ஆன்மிக வாழ்வில் முன்னேற மந்திரமோ, உபதேசமோ எல்லாம் இரண்டாம் நிலைதான்.

71. வாழ்வில் நடப்பவற்றை ஏற்றுக்கொண்டு இறைவன் மீது உண்மையான நம்பிக்கை வைப்பவனே சிறந்த பக்தன். நம்பிக்கை மற்றும் பொறுமை இருந்தால் வாழ்வில் ஒருவருக்கு அனைத்தும் கிடைக்கும்.

72. எனது பக்தர்களின் வீட்டில் அன்னமில்லை, உடுக்கத் துணி இல்லை. செல்வமில்லை, உடல்நலம் இல்லை என்ற சொற்களே உண்டாகாது. என் பக்தர்களை எல்லாவித சௌபாக்கியங்களும் நிறைந்தவர்களாக நான் செய்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

73. கல்லறைக்குள் இருந்தாலும் நான் உயிரோடும் சக்தியோடும் இருப்பேன் நீ எங்கு இருந்தாலும் என்னை நினைத்தால் உன்னுடன் இருப்பேன்

## விரத நிறைவு பதிவேடு

| வாரம் | திகதி | மாதம் | வருடம் | நிறைவு |
|---|---|---|---|---|
| 1வது வாரம் | | | | நிறைவடைந்தது |
| 2வது வாரம் | | | | நிறைவடைந்தது |
| 3வது வாரம் | | | | நிறைவடைந்தது |
| 4வது வாரம் | | | | நிறைவடைந்தது |
| 5வது வாரம் | | | | நிறைவடைந்தது |
| 6வது வாரம் | | | | நிறைவடைந்தது |
| 7வது வாரம் | | | | நிறைவடைந்தது |
| 8வது வாரம் | | | | நிறைவடைந்தது |
| 9வது வாரம் | | | | நிறைவடைந்தது |
| | | | | |
| | | | | |
| | | | | |
| உதாரணம் 1வது வாரம் | 05 | 05 | 2015 | நிறைவடைந்தது ✓ |

**ஒன்பது வாரமும் தவறாது விரதமிருந்து நிறைவு செய்தபின் உதாரணத்தில் காட்டியவாறு திகதி மாதம் வருடம் என்பனவற்றை இட்டு நிறைவை குறித்துக்காட்டுக?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயிராம்

எமது இவ் ஆலயம் 2008ம் ஆண்டு சிறிய கொட்டிலாகவே ஆரம்பிக்கப்பட்டு இன்று கட்டிட அமைப்பை கொண்ட ஒரு ஆலயமாக திகழ்கின்றது. இவ் ஆலயத்தில் மூலமாக ஸ்ரீ சீரடி நாதரும் பரிவார மூர்த்திகளாக நவசக்தி, கணபதி நவலிங்கேஸ்வரர், ஸ்ரீ சுவர்ணகர்ஷண பைரவர், ஸ்ரீகர்பர்சாபிகா, ஆகிய மூர்த்தி கள் இருந்து அருள்பாலிக்கின்றனர். மேலும் சீரடியில் இருமாறு போல "துவாரகமாயி குருய்தான், துனி என்பன் இவ ஆலயத்தில் பாபாவின் அருளோடு அமைந்து காணப்படுகிறது. மேலும் எந்த குரு சீரடி சாயி பாபப ஆலயத்திலும் இல்லாதவாறு இவ்வாலயத்தில் கொடித் தம்பம் அமைந்துள்ளது. புரட்டாதி மாத பூரணையை நிறைவாக கொண்டு சாபி நாதருக்கு வருடம் தோறும் 12 திங்கள் உற்சவம் நடைபெறுகிறது. 2012ம் ஆண்டு சைவ ஆகம முறைப்படி சாயி நாதருக்கு மகா கும்பாபிஷேகம் இடம்பெற்றது. அவ்வருடமே சாயிநாதர் முதன் முறை யாக திருத்தேரிலே ஆரோகணித்து பவணி வந்தார். மேலும் இவ்வாலய பூசைகள் யாவும் சைவ முறைப்படி யும், வருட இந்திய முறைப்படியும் இடம் பெறுகிறது. குருபூர்ணிமாவுக்கு சாயிநாதருக்கு மஹா பட்டாபிஷேகம், ஸ்ரீ ராம நவமி தினத்தன்று இலட்சார்ச்சணை சாவடி ஊர்வலம் என்பன இடம பெறுகிறது. மேலும் சீரடியில் இருந்து எடுத்து வரப்பட்ட வெள்ளை கலவைக்கல்லால் ஆன பாபா விக்கிரகம் 22.02.2015 மஹா கும்பாபிஷேகம் செய்யப்பட்டு 108 நாட்கள் மண்டபாபிஷேகம் பக்தர்களது கரங்களால் இடம் பெற்றது. எனவே இவ் ஆலயம் பாபவால் அவருடைய அனுமதியின் கீழ் எல்லா நிகழ்வுகளும் நடைபெற்று வருகிறது.

**"பாபா எனும் நாமம் நம் பாவம் தீர்க்கும் நாமம்**

**சோதனை எது வந்தாலும் வாக்கும் சீரடி சாயி நாமம்....."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு பூர்ணிமா

குரு பூர்ணிமா உற்சவமானது சீரடியில் மிக விசேடமாக கொண்டாடப்படுகிறது.குருவை மதித்து அவரது தாழ் பணிந்து அருளைப்பெறுவதற்காக கொண்டாடப்படும் உற்சவமே குர பூர்ணிமா ஆகும். அந்த வகையில் எங்கள் சற்குரு சாயிநாதா வேப்பமரத்தடியில் பாலகனாய் தோன்றிய தினம் என்றும் சாயி நாதருக்கு அவருடைய குரு தனது சக்திகளை தாரை வார்த்துக் கொடுத்த நாள் என்றும் சொல்லப்படுகிறது.

அந்த வகையில் எங்கள் சற்குரு சாயிநாதர் தனது60 ஆண்டு கால சீரடி வாசத்தில் எந்தவிதமான உபதேசங்களையும் செய்யவில்லை. தனது இருப்பினாலேயே அவர் வாழ்ந்து காட்டிய முறையில் பல கருத்துக்களை தெரிவித்தார். சாயி நாதரின் இரு பிரதான கருத்துக்கள் **நம்பிக்கை**(ஷார்த்தா) **பொறுமை**(சபூர்) என்பனவாகும்.

எமது இவ் ஆலயத்தில் இலங்கையில் எங்கும் இல்லாதவாறு சாயி நாதருக்கு அன்றைய தினம் "மஹா பட்டாபிஷேகம்" செய்யப்பட்டு பக்தர்கள் சாயி நாதருக்கு அறுகரிசி இடவும் அனுமதிக்கப்படுகிறார்க்ள். வருடத்தில் ஒரு முறை சாயி நாதருக்கு அறுகரிசி இடும் வைபவம் மிகச்சிறப்பானது.யாதெனில் இதை சம ஆராதனை என அழைப்பார்கள். மேலும் அன்றைய தின பூசைகள் யாவும் சீரடியில் நடைபெறும் விதமாக நிகழ்கின்றது. எனவே அன்றைய தினம் சாயி நாதனை பணிவோமாக!

**ஓம் சாய் ராம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாயி சரணம்

சைவமும் தமிழும் நெடுநாளாய் வளர்ந்த,வளர்த்த நல்லூர்ப் பதியிலமர்ந்து துன்பத்துடனும், துயரத்துடனும் நாடி வரும் பக்தனுக்கு அன்னையாய், தந்தையாய், உற்றவராய், உறவினராய் தன்னை உணரவைத்து துன்ப துயரங்களை நீக்கி அடியவனின் மனதில் ஆனந்த வெள்ளத்தை ஊற்றெடுக்கச் செய்த நித்யகல்யாணா நின்றும், இருந்தும், கிடந்தும்,நடந்தும் உன்னருளைப் பெற்றிட எனக்கருள் செய்கின்ற சாயிநாதா உன்பாதங்கள் சரணம் சரணம்

**வெளியீட்டாளர்**

ஜெய் ஸ்ரீ ஸாயி ராம்  ஜெய் ஸ்ரீ ஸாயி ராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

by Noolaham Foundation.
m.org | aavanaham.org

# ஷிர்டி சாயிபாபா

## ஒன்பது வியாழக்கிழமை விரதமும் பூஜா முறைகளும்



Sri Maruthi Printers
T.P : 0777 917680

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org